இலவச வெளியீடு: யேர்மனி - இங்கிலாந்து-கனடா தை. Jan. 2013

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 63 பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A. ஓசை 197

Orientalische Textilien & Schmuck

22 ஆண்டுகளாக நம்பிக்கை!
நாணயத்தின்!! இருப்பிடம்.
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க நகைமாளிகை

தொடர் மலிவு விற்பனை!

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

# எங்கிருந்தோ ஒரு சக்தி! வந்து தமிழனைக் காக்காது!

## எமக்குள் ஒன்றுபட்ட சக்தியே! காக்கும்!!




கனீன் எலக்ரோனிக்ஸ்!
புதியதோர் தொழில் நுட்பம்! புதியதோர் வாய்ப்பு!!
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal Tel: 0205 3423 740

T.T.S.Brothers GmbH&Co.KG
எமது புதிய கிளை ஸ்தாபனம் !
Tel:0231 819288
RHEINISCHE STR 52
44137 DORTMUND
ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் வேண்டுதலுக்கு இணங்க
எமது கிளை ஸ்தாபனம் 53227 Bald in Bonnbeuel நகரத்தில்
Johannesstr.35 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

10.01.2013-19.01.2013
5 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
விபரம் உள்ளே.12
Rheinische Str.81
44137 Dortmund
Germany
Gopara Gnanam
Tel: 0231/5450028-Mob: 01713306542

கலைஞர் ஐங்கரன்
JAYA TV
Ayngaran foods
Address
30 High Street Colliers Wood,
Colliers Wood
London, SW19 2JE
தொலைபேசி இல. 0044 208 543 43 22
ayngaran.com

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Tel.: 0231/8602696 Kipper str.Tor.3- 44147 Dortmund
StaR - Impex

S.K.Silks & Gold Paraadise
டோட்முண்ட் நகரில்
மாபெரும் ராஜமுத்திரை
தைப்பொங்கலை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
02.01.13 முதல்.19.01.2013 வரை
1 பஞ்சாபி வாங்கினால் 2 இலவசம்!
1 காக்கிறாச்சேலி வாங்கினால் 2 இலவசம்
1 குருத்தா வாங்கினால் 1 இலவசம்
என்றும் புதியது அழகின் இரகசியம் அது.
11th ANNIVERSARY
Mr.P.Sritharan.
Proprietor
Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647

Jewellers & Silk House
London's Largest Selections
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
Rathy ரதி
28 Ealing Rd
Wembley
HA0 4TL London
Tel: 02089033063
209 upper tooting Road
tooting sw19 7gt
0208682 2233

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




Tel.: 0201/236925
Fax: 0201/236928

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...

Ria MONEY TRANSFER
இதோ!!! துரித பண மாற்றுச் சேவை!

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்

T.R.S Traders



இலங்கை, இந்திய உபஉணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

T.R.S Traders
Königswall-16 (Am Hbf)
44137 Dortmund
உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்
Tel.: 0231/160 494
Fax: 0231/165 6524



மாதங்கி

# அன்று உலக அழிவைக் காத்த அந்த மனிதர்களுக்கு நன்றி!

உலகம் அப்பாடி! எப்படியோ பிழைத்துக் கொண்டது.
மரணம் என்றால் பயம் யாரை விட்டது.
பகுத்தறிவாளனுக்கும் பயம் இடை இடையே வந்துதான் போகும்.
எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஒரு வருடத்திற்கு முன்பு சொன்னார் -அடுத்த வருடம் மார்கழி 21 இல் உலகம் அழியுமாாம் என்று, நாடே புலம்புது. பத்திரிகைளும் பக்கத்தை நிரப்பவும், அரசாங்கங்கள் பெற்றோல் விலை உயர்வை திசை திருப்பவும். இடை இடையே இச்செய்திக்கு முக்கிய இடம் கொடுக்கிறார்கள். இந்தக்காலத்திலும் இதுகளை நம்புதுகள் சனம் என்றார்.

கடந்த மாதம் 20ம் திகதி அவரை தெருவில் கண்டேன். கையில் மெழுகுதிரி ஒரு கட்டுடன் சென்று கொண்டு இருந்தார். என் சேச்சுக்கோ என்றேன். இல்லை இல்லை நாளைக்கு 21ம்திகதி, 3நாளைக்கு சூரியன் உதிக்காதாம். கறன்டும் போய்விடுமாம், அதுதான் மெழுகுதிரி வாங்கிக் கொண்டு போகிறேன் என்றார். அவருடைய முகத்தில் அன்று ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த அந்த மலர்ச்சி இல்லை. மரணப்பயம் முகத்தைக் கௌவி இருந்தது.
இப்படி பயப்படாதவர்களுக்கும் ஏதோ ஒரு மூலையில் ஒரு பயம் இருந்து வந்துள்ளது. ஆனால் இந்த உலகத்தை காத்தது கடவுள் இல்லை! கடவுள் வடிவில் வந்த மனிதர்தான் என்று ஒரு செய்தியைப் பார்த்தபோது அறிய முடிந்தது.
1950களில் நிலவை அணு குண்டு வைத்து தகர்க்க அமெரிக்கா திட்டமிட்டிருந்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது. இப்போது "புராஜெக்ட் ஏ119" என்ற திட்டத்தை அமெரிக்கா தீட்டியது. ஆனால் அத்திட்டத்தை அது செயல்படுத்தவில்லை.

இது குறித்து தி டெய்லி மெயில் DailyMail வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது,
சோவியத் யூனியன் விண்வெளிக்கு ஸ்புட்னிக் விண்கலத்தை அனுப்பிய பிறகு பூமியில் இருந்து நிலவு வெடிப்பதைப் பார்த்தால் அது சோவியத் யூனியனுக்கு ஒரு பேரதிச்சியாகவும், அமெரிக்காவின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும் இருக்கும். பெயர் வெளியிடப்படாத இடத்தில் இருந்து சிறிய அணு குண்டை நிலவுக்கு அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டிருந்தது. ஹைட்ரஜன் குண்டை விண்கலத்தில் அனுப்பினால் அது மிகவும் கனமாக இருக்கும் என்பதால் அணு குண்டை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.
ஆனால் இந்த திட்டம் தோல்வி அடைந்தால் பூமியில் உள்ள மக்களுக்கு ஏற்படும் விபரீதங்களை கருத்தில் கொண்டு ராணுவ அதிகாரிகள் இம்முயற்சியைக் கைவிட்டனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




சோவியத் யூனியன் ஸ்புட்னிக்கை அனுப்பியதால் ஆத்திரமடைந்தே இந்தத் திட்டத்தைத் தீட்டியது அமெரிக்கா மேலும் சோவியத் யூனியனை விட தானே வலிமையானவன் என்பதை நிரூபிக்கவும் இந்த திட்டத்தை தீட்டியது அமெரிக்கா.



Brains of the operation: Astronomer Carl Sagan, left, was involved in the planning of the mission and physicist Leonard Reiffel, right, was the man in charge

இ[illegible]ரிகள் மனதில் ஆண்டவன் அந்த நற்சிந்தனையை விதைத்திருக்காவிட்டால் இன்று நானும் இல்லையே நீயும் இல்லையே!
இன்னுமொரு உண்மை! இந்த உலகம் கோடனகோடி முறை அழிந்துவிட்டது. அதாவது ஒவ்வொருவரது மரணத்திலும் மரணிப்பது மனிதர் மட்டுமல்ல இந்த உலகமும்தான். எனவே ஒவ்வொருவரது பிறப்பின் போதும் உலகம் பிறக்கின்றது. ஒவ்வொருவரது இறப்பின் போதும் உலகம் மறைகின்றது.




SREE SHAKHTHE
Jewellery
தரமான தங்க நகைகளை தங்கள் விருப்பம்போல் தெரிவு செய்ய நாடுங்கள்
Königswall 10
44137 Dortmund
Tel: 0231 53 30 154-0231 53 30 155
Fax:0231 53 30 148
Nanthakhummar(Nannthan)



Bielefeld நகரில்....

Lakshmi Jewellery &Silks

Asia super markt

பலசரக்குப் பொருட்களையும் எம்மிடம் மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்

3 in one

தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும், வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்
Lakshmi Jewellery &Silk

பழைய பவுணுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

செவ்வாய்க்கிழமை முதல் சனிக்கிழமை வரை
காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

பழைய பவுணுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

Wilhelm Str.09
33602 Bielefeld

தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de


Tel:0521 4283 510



அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

## வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—————கவிஞர்.வி.க


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாசாலை)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



**Brinker Höhe.13**
**58507 Lüdenscheid**
**Germany**
**Tel: 02351/45 88 62**
**0157 88 77 31 56**

e-mail: vettimaniy@hotmail.com


QB 830

**"வெற்றிமணிமொழி"**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


**அரவிந்தர்**

பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

# எங்கிருந்தோ ஒரு சக்தி! வந்து தமிழனைக் காக்காது! எமக்குள் ஒன்றுபட்ட சக்தியே! காக்கும்!!

## தமிழர் தமிழருடன் பேசி முடிவு எடுக்க முடியாவிட்டால் - பின் எப்படி சிங்கள அரசுடன் பேசி ஒரு முடிவுக்கு வரலாம்!



யுத்தம் ஓய்ந்து அடுத்தடுத்து 2010,2011,2012,2013 என்று மூன்று ஆண்டுகளைக் கடந்து நான்காவது ஆண்டில் வந்து நிற்கின்றோம். தமிழர்க்கு ஏன் இன்னுமொரு தீர்வு வழங்கவில்லை என்பதே எல்லோருடைய கேள்வியும்.தீர்வு என்ன என்பது எவருக்கும் புரியாது இருக்கலாம்,

ஆனால் பெரும்பான்மை அரசுக்கு மட்டும் அது தெட்டத்தெழிவாகத் தெரியும். அதனையே மெல்ல மெல் நடைமுறைப்படுத்தி வருகின்றது.
தமிழர்கள் இன்னும் அவர்கள் வருவார்கள், இவர்கள் வருவார்கள், என்று தாம் தனக்குத்தான் விரும்புவதையே நிஜயம்போல் எண்ணிக்கொள்கிறார்கள்.

எண்ணத்துடன் மட்டுமல்ல எழுத்து, பேச்சு, அனைத் திலுமே யாரோ ஒருவர் வந்து குதிரையில் பகைவனை வீழ்தி விட்டு தமிழர்களைக் காத்துவிட்டு செல்வார்கள் என்ற நம்பிக்கை உயர் மட்டத்தில் இருந்து அடிமட்டவரை இருக்கிறது.

இன்னும் தமிழர்களுக்கு நடந்த இன்னலுக்கு அரசினைக் குறை கூறுவதிலேயே நேரத்தை செலவு செய்வதை விட்டு. அந்த அழிவுக்கு வழிவகுத்த காரணிகளை அறிந்து, இனி வருங்காலத்தில் அரசியல் சாணக்கியத்துடன் நடக்க முயற்சியும், பயிற்சியும் பெறவேண்டும் என்பதே தாயகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் மக்களின் வேண்டுதலாக உள்ளது.

ஒரு பக்கத்தில் இராணுவத்தினர், கட்டாயத் திருமணங் களை வன்னியில் நடத்துவதாகவும்.
இராணுவத்தில் பெண்களைச் சேரத்து பயிற்சி என்று சீரழிப்பதாகவும் பல பல உண்மைகள், வதந்திகளாக வலம் வருகின்றன.
நமக்குள் நாமே எம்மைக் குறைகள் கூறுவதை முதலில் நிறுத்தி, நிறைகள் பற்றி ஆராயவேண்டும். குறைகளை அறிக்கைவாயிலாக வெளியிடுவதற்கு முன் அவரவர் களுடன் பேசி முடிவுக்கு வரவேண்டும்.

தமிழர் தமிழருடன் பேசி முடிவு எடுக்க முடியாவிட்டால், பின் எப்படி சிங்கள அரசுடன் பேசி ஒரு முடிவுக்கு வரலாம்.

ஒற்றுமை என்பது ஓர் இலக்கை அடையும் வரையாவது குறைந்த பட்சம் நீடிக்க வேண்டாமா?

இந்த ஆண்டு அரசுடன் பேசித்தீர்வு காணும் ஆண்டாக இல்லாவிட்டாலும். பேசுவதற்கு தமிழர்கள் ஒன்றுபடும் ஆண்டாக அமைந்தாலே அதுபோதும். இது கற்பனை அல்ல! இதுதான் யதார்த்தமான நிலை!

எங்கிருந்தோ ஒரு சக்தி தமிழனைக் காக்கும், என இனியும் எண்ணாது ஒன்றுபட்ட சக்தியாக தமிழன் ஒன்றுபடவேண்டும்.


**Kinderzuschlag,Wohngeld பெற்றுவரும் குடும்பத்தினர்க்கு!**

# யேர்மனியில் உங்கள் பிள்ளைகளுக்கு பணம் பெறலாம்!பயன் பெறலாம்!

Muthurajah Edinborajah Stuttgart

Kinderzuschlag,Wohngeld பெற்றுவரும் குடும்பத்தினர்க்கு பிள்ளைகளிற்கு மேலதிக உதவியாக Jobcenterல் Bildung und Teilhabe என்னும் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.
வருடாந்தம் பாடசாலை மாணவர்களிற்கான **100€** மாதாந்தம் பாடசாலை போக்குவரத்துச் செலவின் ஒருபகுதி- வருடம் ஒரு முறை பாடசாலையால் Ausflug செல்லும் கட்டணம்.மற்றும் மாதாந்தம் **10€** பிள்ளைகளின் freizeit activitis ( Sports, Musik, Swimmen. Musium besuch und Viele) கட்டணம் என்பனபெற்றுக் கொள்ளலாம்.



இதற்கு நீங்கள் Jobcenterல் விண்ணப்பப்படிவம் எடுத்து நிரப்பி கொடுக்கவேண்டும். இது முழு ஜேர்மன் நாட்டிற்கு மானது. கடந்த மூன்று வருடமாக நடைமுறையில் உள்ளது. விண்ணப்பித்து பயனடையுங்கள்.






உலகை வலம்வர உங்கள் உற்றதுணை நாங்கள்!

# Century Travels & Tours

**இந்தியாவுக்கான
விசா பெற்றுத் தரப்படும்**

email : info@centurytravels.de

**Rhenische Strasse 29
44137 Dortmund.Germany**

**Fax: 0231 5844665**

**Ram Nishanthan**
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
**017621682149**
website : www.centurytravels.de
Mayuran **01772330010**

**Last Minute Tickets:**
குறைந்த விலையில்
பயணச்சீட்டுக்கள்
நேரடியாகத்
தொடர்பு கொள்ளுங்கள்!
நேரடித்தொர்பு:
**0231 985 333 27**
Number: 017621682149

# காதோடு காதாக

**கலைக்கதிர் கதிர்.துரைசிங்கம்.**



பாடகியின் தாய்: இரண்டு மணித்தியாலம் மினக்கட்டு தலைமையிரைச் சிக்கெடுத்து வடிவாக கொண்டை போட்டுவிட குலைச்சுப் போட்டு மயிரையும் முகத் திற்கு முன்னாலை விட்டுவிட்டு வந்து நிற்கின்றாய்.

பாடகி. **T.V.**நிருபர் கேள்வி கேட்கும் போது முகத்தில் விழுகின்ற மயிரை அப்பப்ப Style ஆக ஒதுக்கி ஒதுக்கி விட்டுக் கொண்டே இருந்தால் தன்னம் பிக்கை வரும். Fashion ஆகவும் இருக்கம்.

தாய்: தன்னம்பிக்கை மயிரிலை இருக்கும் என்று இப்பதான் அறிஞ்சனான்.

தந்தை: நாயுடன் வீட்டுக்கு வரும் மகனைப் பாரத்து ஆவேசமாக உந்தக் கழுதையை எங்கு கொண்டு திரிகிறாய்.
மகன்: அப்பா! இது கழுதை அல்ல நாய்.

**கூசும் கூச்சமும்**

நரம்பு வைத்திய நிபுனர்.:
கூச்சம் என்ற குறிப்புடன் குடும்பவைத்தியர் உங்களை என்னிடம் அனுப்பியிருக்கிறார்.
எந்த இடத்தில்? என்ன செய்தால்?எந்தநேரத்தில் கூச்சம் ஏற்படுகிறது என்று கூச்சம் இல்லாமல் விரிவாகக்கூறுங்கள்.
நடிகை: டொக்டர் சூட்டிங் ரைமிலை எந்தக்கூச்சமும் தெரியாது. வீட்டுக்கு வந்து டினர்க்கு அப்புறம் ஐஸகிரீம் தின்னும்போது மவுத்திலை லெப்டு சைட்டுக்குமேலே பல்லிலை கூச்சம் தெரியும்.
வைத்தியர்:
கூச்சம் என்று நரம்பு வைத்தியர் (என்னிடம) வந்த முதல் நடிகை நீங்கள்தான். நீங்க சொன் கூச்சத்தை சரியான தமிழில் சொல்வது என்றால் பல்கூசுகிறது என்று சொல்ல வேண்டும். கூச்சமில்லாமல் இந்த கூசும் வருத்தத்திற்கு உடன் பல்வைத்தியரை நாடுங்கள்.

# எதற்கும் ஒரு வழியுண்டு!



பேராசிரியர் நியூக்கிளிட் தன் பேராசிரிய நண்பர்களுடன் எகிப்த்து நாட்டுப் பிரமிட்டுக்களை அப்போது பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் ஒரு நண்பர் நீயூக்கிளிட் எல்லோரும் உங்களை அறிஞ்ஞர் என்று சொல்கிறார்கள் இந்தப் பிரமிட் சரியாக எவ்வளவு உயரம் என்று சொல்ல முடியுமா? உங்களிடம் அளக்கின்ற டேப் உள்ளதே என்றார் யாராலும் பிரமிட் மேலே ஏறி உயரத்தைக் கண்டு பிடிக்க முடியாது.

ஏனென்றால் அதன் அடிப்பகுதி மிகவும் அகலமாகும் போகப் போக குறுகிக் கொண்டும் செல்கின்றது அங்கிருந்து டேப்பை தொங்க விட்டும் அளக்கமுடியாது என்பது நியூக்கிளிட்டுக்கும் புரிந்தது. ஏல்லோரும் அவரைப்பார்த்துச் சிரித்தார்கள்.
நண்பர்களே "இயலாத செயல் என்று எதுவும் இல்லை. எதற்கும் ஒரு சுலபமான வழி இருக்கின்றது" என்றார் நியூக்கிளிட், பின் அவர் தன் கையில் இருந்த டேப்பால் பிரமிட்டின் நிழலை அளந்தார். அதைக் குறிக்கச் சொன்னார்.
பின் அதே டேப்பால் தன் நிழலை அளந்தார், தன் நிழலையும் தன் உயரத்தையும் வைத்துக் கணக்கிட்ட அவர், பிரமிட்டின் உயரத்தையும் கணக்கிட்டுச் சொன்னார். அவர் சொன்னது பிரமிட்டின் துல்லியமான உயரமாக இருப்பதைக் கண்டு பேராசிரியர்கள் வியப்படைந்தார்கள்.

படித்ததில் பிடித்தது: **நிதி.கொழும்பு**



# பிள்ளையள் ஒவ்வொரு நாளும் வருவினம்.




குளிர் தாங்க முடியவில்லை. ஆச்சி கதிரையில் ஏறி அலுமாரிக்குள் மேல்தட்டில் இருந்த சுவற்றரை எடுத்திருக்கிறா. கதிரை தள்ளடா இல்ல! இல்ல!! ஆச்சி தள்ளாடக் குப்பிறவீழுந்து நாரியில் சரியன அடி.
நான் தூரத்துச் சொந்தமாக, இருந்தாலும் சின்னவயதில் ஆச்சி என்குச் செய்த உதவியை மறக்காமல் சுகம் விசாரிக்க வீடு சென்றேன்.
ஆச்சி நாரி நோவிற்குள்ளும் சிரித்தபடி என்னை வரவேற்றா.

பிள்ளைகள் எப்படி? என்ன செய்கிறார்கள். அவர்களும் உங்களுக்கு பக்கம் பக்கம்தான் இருக்கினம் என்று கேள்விப்பட்டேன்..

ஓம் பிள்ளை! நாலுபிள்ளைகளும் இங்கைதான் பக்கத்தில் இருக்கினம். ஒருத்தன் மட்டும்தான் கனடாவில். அவன் மட்டும் இடையிடைதான் வருவான் மற்ற நாலும் அடிக்கடி என்ன! ஒவ்வொரு நாளும் ஒருவர் மாறி, ஒருவர் வருவினம்.

அப்ப ஏன் ஆச்சி, பிள்ளையள் நிற்கும் நேரம் உந்தச் சுவற்றரை எடுப்பித்து போட்டிருக்கலாம் தானே.
பிள்ளையள்தான் எனக்கு குளிர்வதைப் பார்த்து, அம்மா சுவற்றரை எடுத்து போடுங்கோ என்று சொன்னவை.
அப்ப பிள்ளையள் நிற்கைக்கையே ஆச்சி விழுந்த நீங்கள். அப்ப ஏன் அவை வழுக்கைக்க பிடிக்கவும் இல்லையே! ஏன் எடுத்தும் தந்திருக்கலாமே!
ஓம் பிள்ளை! பிள்ளையள் நின்றவைதான். ஆனால் அவை நேரில் இல்லை ஸ்கைப்பில் நின்றவை.

அப்படி என்றால் ஒவ்வொரு நாளும் பிள்ளைகள் வருவினம் என்றது ஸ்கைப்பில்தானோ!

# இலங்கையில் 5 பிள்ளைகளை பெற்றெடுக்கும் சிங்களவர்களுக்கு பரிசில்கள்!




இலங்கையில் ஐந்து பிள்ளைகளை பெற்றெடுக்கும் சிங்களக் குடும்பங்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாக பிரான்ஸ் மஹாநாயக்கர் பரவாஹர சந்தரதன தேரர் தெரிவித்துள்ளார். சிங்களக் குடும்பங்களில் பிள்ளைகளை பெற்றெடுக்கும் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. அடுத்த ஆண்டு முதல் ஐந்து பிள்ளைகளை பெற்றெடுக்கும் சகல குடும்பங்களுக்கும் நிதி உதவிகளை வழங்கப்படும்.

சிங்களக் குடும்பங்கள் அதிகளவில் பிள்ளைகளை பெற்றெடுக்காத காரணத்தினால் பிற்காலத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும். இதன் மூலம் பௌத்த பிக்குகளை உருவாக்குவதிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.
சிங்களக் குடும்பங்களில் பிள்ளைகள் இல்லாத காரணத்தினால், பங்களாதேசிலிருந்து பிள்ளைகளை இறக்குமதி செய்து பௌத்த துறவிகளாக மாற்ற வேண்டியுள்ளது. இதனால் சிங்கள இனம் அழிவடைந்து செல்கின்றது என தெரிவித்துள்ளார். பிரான்ஸில் நடைபெற்ற (2012-12-05) பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.




நாடு விட்டு நாடு வந்ததும், அன்று பெரும்பாலான பெண்கள் செய்த முதல் வேலை (லண்டன்) தலைமயிரை வெட்டி பொப்பாக்கிதுதான். காரணம் விரும்பியதுபோல் ஒவ்வொருவரும் கூறிக்கொண்டனர். என்ன இருந்தாலும் பெண்களுக்கு கூந்தல் அழகு. அதற்காக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறவேண்டுமெனச் சொல்லவில்லை.
சாதாரண கூந்தலுக்கே அன்று பட்டபாடு. இப்போது உள்ள இளம் பெண்கள்சரி வயதானவர்கள் சரி, கூந்தலை நேராக்கிறார்களே அன்றி, நறுக்குவதில்லை. உண்மையில் தற்போது நமது கலாச்சாரம் ஆடைகள் இவற்றை கௌரவமாக எண்ணி அணியும் ஒரு சிறந்த காலமாகக் கொள்ளலாம்.
சரி அது அப்படியே இருக்கட்டும், சொல்லவந்த சங்கதி வேறு.
உலகின் மிக நீண்ட கூந்தலை உடையவர் 12 வயது உடைய இந்தச் சிறுமி. பிரேசில் நாட்டைச் சேர்ந்த இவரின் பெயர் Natasha Moraes de Andrade. இது வரை இவர் தலை மயிர் வெட்டியது கிடையாது. தலை மயிரின் தற்போதைய நீளம் ஐந்து அடி இரண்டு அங்குலம். இவர் நடக்கின்றபோது தலை மயிர் நிலத்தைக்கூட்டும் அளவுக்கு நீளம். இந்தப் பெண் தற்போது முதல் தடவையாக தலைமயிரை வெட்டி இன்றைய பெண்கள் போல் வசீகரித்துக் கொண்டாள். கொஞ்சம் கவலை, கொஞ்சம் மகிழ்ச்சி, கொஞ்சும் அவள் முகத்தில் தெரிகிறது பாருங்கள்.

ASIJAH
EUROPE

Our Contact Details:
Asijah-Europe
De Steven 12
9206 AX Drachten
The Netherlands
Tel: +31 512 54 18 31
+31 512 53 91 44
Fax:+31 512 54 38 66
Email: info@asijah.com
Hotmail:
asijaheurope@hotmail.com



ASIJAH
EUROPE
Wholesale Distributors of finest
Sri Lankan Grocery Foods
www.asijah.com

ஐரோப்பா எங்கும் இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள் மொத்த விற்பனை செய்கின்றோம்.



KIOSK & ASIAN MARKT
Lebensmittal
பசுமையான மரக்கறிகள்
கடல் உணவு வகைகள்
இன்னும் பலசரக்குப் பொருட்கள்
அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
Tel:02332 50 97 568
Hagener Str.158
58285 Gevelsberg
உரிமையாளர்:
த.மனோகரன்

# பாரதியின் எழுத்துக்கள் பற்றிய எதிர்வினைகளும்- உண்மைகளும்

நீர்வை. தி.மயூரகிரி சர்மா



"தன் தேவைகளுக் காக எட்டயபுரம் ராஜா, மகாராஜாக்கள் மீதான சீட்டுக் கவிகள் பாடியதாக" பாரதி மீது மதிமாறன் குற்றம் சாட்டுகிறார்.

பாரதி தமது வாழ்வில் தாம் பிறந்த மண்ணாகிய எட்டயபுரத்தின் மன்னருக்கு மட்டுமே சீட்டுக்கவி எழுதியனுப் பினார். அதுவும் அவர் விரும்பி அனுப்பவில்லை.

""எட்டயபுரத்தில் தங்கியிருந்தபொழுது 1919.05.02 எங்கள் (தனது குடும்பத்தாரின்) வற்புறுத்தலின் காரணமாகப் பாரதி ஜமீன்தாருக்கு சீட்டுக்கவிகள் மூன்றும் ஓலைத்தூக்குப் பாடல்கள் ஐந்தும் எழுதியனுப்பினுப்பினார்"" என்று பாரதியின் தம்பி சி.விசுவநாதன் குறிப்பிடுகிறார்.

பாரதியின் குடும்ப வறுமையைப் பார்க்கும் பொழுது பாரதியால் எதுவும் செய்ய இயலாத நிலைமை அப்போது இருந்தது. போதிய வருமானம் இல்லை. பாரதியார் சீட்டுக்கவி எழுதும் போது திருமண வயதில் அவருக்குப் பெண் இருந்தாள்.

பாரதி எழுதிய சீட்டுக்கவியைப் பார்த்தோமானால், அவன் மீது நமக்கு அளப்பரிய மரியாதைதான் ஏற்படுகிறது. பழங்காலத்தில் புலவர்கள் மன்னரிடம் பரிசு பெறுவதற்காக மன்னரை வான ளாவப் புகழ்வார்கள். தங்களின் பெருமையையும் சிறிது அதில் குறிப்பிட்டுக் காட்டுவார்கள். ஆனால் மன்னனையும் தன்னையும் சமமாக வைத்து எந்தப் புலவரும்பாடவில்லை. பாரதி இங்குதான் வேறு படுகிறார். மன்னரைப் பாராட்டுவதைவிட தன்னைப் பற்றிய அறிமுக செய்திகளுக்கே தமது சீட்டுக்கவிப் பாடல்களில் முதலிடம் அளிக்கிறார்.

ஓலைத்தூக்கும் (2-5-1919)இ சீட்டுக்கவியும் (3-5-1919 ) எட்டயபுரம் ராஜாவுக்கு (வெங்கடேசுர எட்டப்ப நாயக்கருக்கு) பாரதி எழுதியதாகும். முதலில் 2-5-1919ல் எழுதியதைப் பார்ப்போம்.

ஸ்ரீ எட்டயபுரம் மஹாராஜ ராஜேந்த்ர ஸ்ரீவெங கடேசு ரெட்டப்ப பூபதியவர்கள் ஸமூஹத்துக்கு கவிராஜ ஸ்ரீசி.சுப்பிரமணிய பாரதி எழுதிய ஓலைத்தூக்கு என்ற தலைப்பில் பாரதி எழுதுகிறார் :

"ராஜமஹா ராஜேந்திர ராஜகுல
சேகரன்ஸ்ரீ ராஜ ராஜன்
தேசமெலாம் புகழ்விளங்கு மிளசைவெங்க
டேசுரெட்ட சிங்கன் காண:
வாசமிகு துழாய்த்தாரான் கண்ணனடி
மறவாத மனத்தான் சக்தி
தாசனெனப் புகழ்வளர்சுப் பிரமணிய
பாரதிதான் சமைத்த பாட்டு ( 1 )

மன்னவனே தமிழ்நாட்டில் தமிழறிந்த
மன்னரிலை யென்று மாந்தர்
இன்னலுறப் புகன்றவசை நீமகுடம்
புனைந்தபொழு திறந்த தன்றோ?
சொன்னலமும் பொருணலமுஞ் சுவைகண்டு
சுவைகண்டு துய்த்துத் துய்த்துக்
கன்னலிலே சுவையறியுங் குழந்தைகள்போல்
தமிழ்ச்சுவைநீ களித்தா யன்றோ? ( 2 )

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழி லேற்றுங்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே?
சுவைபுதிது நயம்புதிது வளம்புதிது
சொற்புதிது ஜோதி கொண்ட
நவகவிதை யெந்நாளு மழியாத
மஹாகவிதை யென்று நன்கு ( 3 )
பிரான்ஸென்று முயர்ந்தபுகழ் நாட்டிலுயர்
புலவோரும் பிறரு மாங்கே
விராவுபுக ழாங்கிலத்தீங் கவியரசர்
தாமுமிக வியந்து கூறிப்
பராவியென்றன் தமிழ்ப்பாட்டை மொழிபெயர்த்துப்
போற்றுகிறார் பாரோ ரேத்துந்
தராதிபனே யிளசைவெங்க டேசுரெட்டா
நின்பாலத் தமிழ்கொ ணர்ந்தேன் ( 4 )

வியப்புமிகு புத்திசையில் வியத்தகுமென்
கவிதையினை வேந்த னேநின்
நயப்படுஸந் நிதிதனிலே நான்பாட
நீ கேட்டு நன்கு போற்றிஇ
ஜயப்பறைகள் சாற்றுவித்துச் சாலுவைகள்
பொற்பைகள் ஜதிபல் லக்கு
வயப்பரிவா ரங்கள்முதற் பரிசளித்துப்
பல்லூழி வாழ்க நீயே. ( 5 )

இந்த ஓலைத்தூக்கில் எட்டயபுர மன்னரின் புகழைப் பாடுவதை விட தன்னைப் பற்றிய பெருமையையே பாரதி அதிகமாகச் சொல்கிறான்.

அடுத்து 3-5-1919ல் எழுதிய சீட்டுக்கவியை இப்போது பார்ப்போம். ஸ்ரீஎட்டயபுரம் ராஜ ராஜேந்த்ர மஹாராஜ வெங்கடேசுர எட்டப்ப பூபதி யவர்கள் ஸமூஹத்துக்கு கவிராஜ ஸ்ரீசி.சுப்பிரமணிய பாரதி எழுதிய சீட்டுக்கவிகள் என்ற தலைப்பில் பாரதி எழுதுகிறார் :

பாரிவாழ்ந் திருந்த சீர்த்திப்
பழந்தமிழ் நாட்டின் கண்ணே
ஆரியஇ நீயிந் நாளி
லரசு வீற் றிருக்கின் றாயால்
காரியங் கருதி நின்னைக்
கவிஞர்தாங் காண வேண்டின்
நேரிலப் போதே யெய்தி
வழிபட நினைகி லாயோ? 1

விண்ணள வுயர்ந்த கீர்த்தி
வெங்கடேசு ரெட்ட மன்னா!
பண்ணள வுயர்ந்த தென்பண்
பாவள வுயர்ந்த தென்பா
எண்ணள வுயர்ந்த வெண்ணி
லரும்புகழ்க் கவிஞர் வந்தால்
அண்ணலே பரிசு கோடி
யளித்திட விரைகி லாயோ? 2

கல்வியே தொழிலாக் கொண்டாய்
கவிதையே தெய்வ மாக
அல்லுநன் பகலும் போற்றி
யதைவழி பட்டு நின்றாய்
சொல்லிலே நிகரி லாத
புலவர்நின் சூழ லுற்றால்
எல்லினைக் காணப் பாயும்
இடபம்போல் முற்ப டாயோ? -3

தொடர்ச்சி 8ம் பக்கம்



Astrologer and Palmreader
ஸ்ரீ துர்க்கா மாதா ஜோதிஷ் மந்திர்
Dortmund நகரில்....
யேர்மனி வாழ் தமிழர்களுக்கு ஓர் நல்ல செய்தி
அகில உலக பிரசித்தி பெற்ற இந்திய ஜோதிடர்
பண்டிற் சாய் ராம் அவர்களின் வருகை!



ஆன்மீக அன்பர்களின் வாழ்வு மேன் மேலும் வளம்பெறவும் தடையாகவுள்ள திருமணங்கள் - காதல் விவகாரங்கள், வியாபார வெற்றியை தரக்கூடிய பலனையும் மற்றும் குடும்பத்தினரிடையேயுள்ள கருத்து முரன்பாடுகளை நீக்கியும் தடைப்பெறும குழந்தை செல்வம் சர்ப்பதோஷம் ராகு கேது தோஷ நிவர்த்திபொருட்டு பரிகாரங்களையும் வழங்கியும் வேலைவாய்ப்பு நோய் நொடி பிணி கடன் தொல்லைகளில் இருந்து விலக்கி வெற்றிபெறவும் பரீட்சையில் சித்திபெறவும் தடையாகவுள்ள அனைத்து தோஷங்களையும் பில்லி சூனியங்களை போக்கும் வழிமுறைகளையும் பரிகாரங்களையும் ஆலோசனைகளையும் எடுத்துச்சொல்லி பணம் பொருள் வீடுவாசல் பெற்று வாழ்வில் பயன்பெற நாடுங்கள் ஜோதிடர் பண்டிற் சாய்ராமிடம். உங்கள்வசம் ஜனன ஜாதக குறிப்புயில்லாவிடின் அவற்றினை கணித்து பலன் சொல்லப்படும் இல்லையேல் கை ரேகையின் மூலமும் பலன் சொல்லப்படும். தொடர்புகளுக்கு நாடவேண்டிய

வாரத்தில் 7 நாட்களும் எங்கள் சேவை உண்டு.

Pandith Sairam - Rhenische Strasse 98 44137 Dortmund.Germany
Tel:0049 (0) 231 22 90 46 79 Mobil:0049 (0) 1521 500 2000

KAILAS Fisch- Feinkost
Tel:0231 137 433 95
டோட்மூண்ட் நகரில்
இதோ கடல் உணவுக்கு ஓர் கடை
ஒவ்வொரு வியாழக்கிழமையும் இலங்கை இந்திய மீன்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்!
தரமான ஆட்டு இறைச்சி எம்மிடம் கிடைக்கும்!
பசுமையான உடன் மரக்கறி வகைகளுக்கும் எம்மை நாடுங்கள்
163 47 60 857
163 47 60 237
web.kailas-fisch.de
email:info@kailas-fisch.de
Adler Str.05
44137 Dortmund

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்




# அட! யுத்தமில்லாத பூமி வேண்டும் - சரி!

# ஆண்கள் இல்லாத பூமி வேண்டுமா?

கனக்ஸ்

பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். பிறேசில் நாட்டு விஞ்ஞானிகள் அங்கே அழிந்து போகும் இடர்ப்பாடு கூடிய இனங்களைக் காப்பாற்றுதற்கான முயற்சியில் ஈடுபடுகிறார்களாம். அந்நாட்டில் உள்ள விலங்கினங்களில் எட்டு இனங்கள் அழியக் கூடிய நிலையில் உள்ளனவாம். இவற்றின் அழிவைக் காப்பாற்றும் முயற்சியில் தான் இந்த உயிரியல் விஞ்ஞானிகள் ஈடுபாடு காட்டுகிறார்கள். இந்த விலங்குகளில் முக்கியமானது Maned Wolf எனும் பிடரி மயிர் ஓநாய். உலகம் முழுவதுமாக இந்த விலங்கின் எண்ணிக்கை 23,600 வரை உள்ளதாம் அதில் பெரும் தொகை ஓநாய்கள் பிறேசில் நாட்டில் உள்ளன.இவ்விலங்குகளைக் எப்படிக் காப்பாற்றப் போகிறார்களாம்? நீங்கள் சில வருடங்களுக்கு முன்னர் கேள்விப்பட்ட முளைவகையாக்கல் (Cloning) முறையினால் தான் இதனை செய்ய எண்ணியுள்ளார்கள்.

ஏற்கனவே பல நாடுகள் தமது நாட்டின் அழியவுள்ள மிருகங்களைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகளில் ஒன்று தான் இந்த முளைவகையாக்கல். ஆனால் அந்த நாடுகள் இது வெற்றியைப் பயக்கவில்லை எனக் கூறியபோதும் பிறேசிலின் முயற்சி சக்கிடுத்தார் ஏறிச் சறுக்கி விழுந்த கதையாகத் தான் முடியுமோ? அவர்கள் கையாளும் முளைவகையாக்கல் முறை கேட்கும் போது மிகவும் சுலபமான விசயம் போலத்தெரிகிறது.

ஓநாயின் தோலில் உள்ள ஒரு கலத்தினை எடுத்து அதன் கருவினைத் தனிப்படுத்துவார்கள். சாதாரண நாயினது முட்டை ஒன்றினை எடுத்து அதன் கருவை நீக்கிட்டு ஓநாயின் கருவினை அந்த முட்டையுள் செலுத்தி விடுவார்கள். இந்த முட்டையை இப்போது ஒரு நாயினது கருப்பையின் உள்ளே பதித்து ( implanting) விடுவார்கள். அங்கே அந்த முட்டை விருத்தியுற்று நாய் சுகப்பிரசவம் செய்கின்ற பொழுது அது நக்கிக் கொடுப்பது நாய்க் குட்டியாயில்லாமல் ஓநாய் குட்டியாகவே இருக்கும்.

நான் சொல்லப் போவது இன்னொரு விசயம். ஆண் இனத்தின் வருங்காலம் பற்றியது. இயற்கையும் ஆண் இனத்திற்குப் பாதகமாய் உள்ளது. அதே போல செயற்கையும் ஆணின் மேல் கை வைக்கும் போலத் தெரிகிறது.

மனித இனத்திலே 23 சோடி நிறமூர்த்தங்கள் உள்ளன என்பது அறிந்ததே. அதில் 22 சோடிகளைத் தன்மூர்த்தம் ( Autosomes) எனவும் ஒரு சோடியை அயன் மூர்த்தம் அல்லது இலிங்கமூர்த்தம் ( Allosomes / Sex- Chro mosomes) எனவும் அழைப்பதும் தெரிந்திருக்கும். இவற்றிலே தன்மூர்த்தங்கள் உடல் இயல்புகளையும் அயன் மூர்த்தங்கள் பாலியல் இயல்புகளைத் தீர்மானிப்பதாயும் கருதுவர். இந்த இரண்டிலே ஒன்று சற்றுச் சிதைவடைந்து காணப்படுகிறது. அதனை Y நிறமூர்த்தம் என்றும் மற்றதனை X நிறமூர்த்தம் எனவம் அழைப்பார்கள் மனித இனத்திலே துர்ப்பாக்கிய வசமாக இந்தச் சிதைவடைந்த Y நிறமூர்தம் ஆண்களில் காணப் படுகிறது (XY). பெண்களில் இரண்டுமே நல்ல நிலையில் உள்ளன (XX). இலிங்க நிற மூர்த்தங்களாலேதான் பாலியல் தீர்மானத்துடன் சம்பந்தமான பரம்பரை அலகுகள் உள்ளன. X நிறமூர்தத்தில் பெண்மைக்கும் Y நிறமூர்த்தத்தில் ஆண் உறுப்புக்கள் விருத்திக்கும் வேண்டிய பரம்பரை அலகுகள் உள்ளன. இங்கேதான் ஒரு செய்தியைக் கூற வேண்டும். இந்தச் சிதைவடைந்த Y நிறமூர்த்தம் தனது கைங்கரியத்தை நிறுத்த வில்லைத் தொடர்ந்து சிதை வடைந்து கொண்டே இருக்கிறதாம்.

இதனாலே தொடக்க காலத்திலே அதில் காணப்பட்ட 1438 பரம்பரை அலகுகளிலே இப்போது வெறும் 45 மாத்திரமே உள்ளனவாம், மிகுதி 1393 போன இடம் தெரியவில்லை.

கணக்குப் போட்டுப் பார்த்த பொழுது ஒவ்வொரு பத்து இலட்சம் வருடங்களில் 4.6 பரம்பரை அலகுகள் சிதைந்துள்ளன. இதன் படிக்கு இன்னும் பத்து மில்லியன் (10,000000) வருடங்களில் **Y** நிறுமூர்த்தம் இருந்த இடமே தெரியாது போய்விடும். அப்போ ஆண்களின் கதி? அங்கேயும் இங்கேயுமாக திருநங்கைகள் ( transgender) பற்றிக் கேள்விப்பட்டுருப்பீர்கள். அண்மைக் காலங்களில் பெரிதாக அடிபட்ட தென்ஆபிரிக்காவின் ஓட்ட வீராங்கனை செமேனியா இந்த வகையினர். பெரும் சர்ச்சைக்கு ஆளாகினார். திருநங்கைகள் ஆண்களாகப் பிறக்க வேண்டியவர்கள் ஆனால் விகாரம் ஏற்பட்டு **Y** நிறமூர்த்தத்தினை இழந்தமையால் ஒரு **X** நிறமூர்த்தத்தை மாத்திரமே கொண்டிருப்பார்கள். எனவே ஆண் உறுப்புக்கள் விருத்தியுறு வதில்லை. பெண்மைக்கான சில துணை இயல்புகள் மாத்திரம் தேன்றலாம். இயற்கை ஆண் இனத்திற்கு ஏற்படுத்திய வஞ்சம் 10 மில்லியன் வருடங்களில் ஆண் இனமே இல்லாமல் போக வழி வகுத்துள்ளதை காண்கிறோம்.

அப்படியாயின் 10 மில்லியன் வருடங்களில் உலக சமூகம் வெறும் பெண்களைக் கொண்ட சமூகமாத்தான் இருக்குமா? ஆண்கள் இல்லாவிட்டால் இனப்பெருக்கம் நடைபெற முடியாதே. அப்படி என்றால் மனித இனமே முற்றாக அழிந்து போய்விடலாம் அல்லவா? மில்லியன் டொலர் வினா என்பார்களே அது இதுதானா?









யோ்மனி- டோட்முண்ட் வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை நடாத்திய திருக்குறள் மனனப் போட்டி கடந்த 03.11.2012ந் திகதி நடைபெற்றது. தொடர்ந்து ஏழாவது ஆண்டாக நடைபெற்ற திருக்குறள் போட்டியில், பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறுபது பிள்ளைகள் பங்குபற்றினர். ஏழு பிரிவாக நடைபெற்ற போட்டிகளில், ஒவ்வொரு பிரிவிலும் பங்குபற்றிய மாணவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும், மற்றைய போட்டியாளர்கள் யாவருக்கும் நினைவுப் பதக்கங்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளின் காட்சிகள் சில.




03-11-2012 அன்று நெதர்லாந்தில் **இலண்டன் தமிழ் வானொலியின் பொன்மாலைப் பொழுது 106.** மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்துடன் இடம்பெற்றது. 33 நிகழ்ச்சிகள் தொடர் அரங்கம் கண்டது. நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர் இளையோர் அரங்கில நிகழ்வுகளை மேடையேற்றினர். தகவல்--திரு.சிவபாலசிங்கம் நெதர்லாந்




## தூவானச் சாரலே

கடந்த 08.12.12 யோ்மனியில் டோட்மூண்ட் நகரில் செல்வி **ஷறிகா** சிவநாதனின் வரிகளில் உருவான இசை அல்பம் "தூவானச் சாரலே" வெளியீட்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. 5 பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழையில் தென்னிந்திய திைப்படப்பாடகர்கள் கார்த்திக், ஹரிச்சரன், கிரீஸ், பூஜா, ஜீவா, பாக்கியராஜ், டொமினிக் ஆகியோர் பாடியுள்ளனர். **இசை: பிரவீன்** தயாரிப்பு: தமிழ்மணி திருமதி நகுலா.சிவநாதன்.

6ம் பக்கத் தொடர்ச்சி

## பாரதியின் எழுத்துக்கள் பற்றிய எதிர்வினைகளும்- உண்மைகளும்

இந்த கவிதையில் பாரதி "தன்னை நேரிலே வந்து பரிசு கொடுத்திடுக" என்றபொருளில் பாடுகிறார். உதவி வேண்டி நிற்பவரைப் போய் உதவிக்கொடுப்பர் பரிசு கொடுக்க வேண்டும் என்பது யாராலும் மொழியப் படாதது. தன்னை நேரிலே வந்து பார்த்து பரிசு கொடுக்க வேண்டும் என்று பாரதி பாடுகிறார். சங்ககாலத்துப்புலவர் முதல் இக்காலத்து புலவர்வரை யாராலும் இவ்வாறு சொல்ல முடியாது. அதற்கான மனத்திண்மை அப்புலவர் களிடம் இருந்ததா என்பது தெரியவில்லை..

ஆனால் பாரதியிடம் அதற்கான மனத்திண்மை இருந்தது. இது யாசிப்பிற்கும் ஒருவரைப் பெருமைப் படுத்த பரிசு கொடுப்பதற்கும் இடையேயான இடை வெளியினை நமக்குப் புலப்படுத்துகிறது. இங்கே பாரதி மற்ற புலவர்களிடமிருந்து விலகியே நிற்கிறார். மஹாராஜ வெங்கடேசுர எட்டப்ப பூபதி என்று சொல்லும்போது தன்னை கவிராஜ சுப்பிரமணிய பாரதி என்று மன்னருக்கு சமமான நிலையிலேயே தன்னை நிறுத்திக் காண்கிறார். இதுவும் மற்றப் புலவர்களிடம் நாம் காணாதது.









# சாப்பிட்டு முடித்ததும் செய்யக்கூடாத செயல்கள்!!!

**வாழ்க்கை முறையில் தான் மாற்றங்கள் என்று நினைத்தால், தற்போது உண்ட பின்பு கூட செய்யும் செயல்களில் வரவர மாற்றங்கள் நிகழ்கின்றன. சிலர் அதிகமாக சாப்பிட்டு விட்டோம் என்று சாப்பிடப் பிறகு நடப்பது, சிகரெட் பிடிப்பது என்றெல்லாம் செய்வார்கள். இது மட்டுமின்றி, இதுபோன்று இன்னும் பல செயல்கள் இருக் கின்றன. அவை என்னவென்று படித்து தெரிந்து கொண்டு, அந்த செயல்களை இனிமேல் உண்ட பின்பு செய்யாமல், ஆரோக்கியமாக வாழ்வதற்கான வழிகளை பின்பற்றி வாழுங்கள்.**

## புகைப்பிடிப்பது




பெரும்பாலான ஆண்கள் சாப்பிட்டதும், ரிலாக்ஸ் செய்கிறேன் என்ற பெயரில் சிகரெட் பிடிப்பார்கள். அவ்வாறு சாப்பிட்டு முடித்ததும் ஒரு சிகரெட் பிடித்தால், அது 10 சிகரெட் பிடித்ததற்கு சமம் என்று ஆய்வு ஒன்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த செயலானது புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பை அதிகரிக்கும்.

## பழங்களை சாப்பிடுவது



உணவை குறைவாக சாப்பிட வேண்டும் என்று சாப்பிடுவதற்கு முன் பழங்களை சாப்பிடுவோம். ஆனால் உணவு உண்ட பின்பு உடனே பழங்களை சாப்பிட்டால், வயிற்றில் காற்றானது நிறைந்து, மிகுந்த உப்புசத்திற்கு ஆளாக்கிவிடும். எனவே பழங்களை சாப்பிட வேண்டுமெனில், உண்ட பிறகு 1-2 மணிநேரத்திற்கு பின்னர் சாப்பிட வேண்டும். அதுவே உணவுக்கு முன் என்றால், 1 மணிநேரத் திற்கு முன் சாப்பிட வேண்டும்.

## தேனீர் குடிப்பது



சிலர் உணவுக்குப் பின் டீ குடிப்பார்கள். ஆனால் அவ்வாறு குடிப்பது தவறு. ஏனெனில் டீயில் அமிலங்கள் அளவுக்கு அதிகமாக இருக்கும். எனவே அப்போது உணவில் உள்ள புரோட்டீனானது, அளவிக்கு அதிகமாகி, பின் செரிமானமடையாமல் வயிற்றில் சிரமத்தை ஏற்படுத்தும்.

## பெல்ட்டை கழற்றி வைப்பது



உணவு உண்ட பின்பு, வயிறு இறுக்குவது போல் உள்ளது என்று சிலர் பெல்ட்டை கழற்றுதல் அல்லது தளர்த்துதல் என்று செய்வார்கள். இவ்வாறு உடனே கழற்றி வைத்தால், குடலானது சில நேரங்களில் திசை திரும்பி, அடைப்பு கூட ஏற்படும்.

## குளிப்பது

உண்டவுடன் குளிப்பது என்பது ஒரு தவறான பழக்கம். ஏனெனில் இந்த செயலால் இரத்த ஓட்டமானது சீராக கைகள், கால்கள் மற்றும் இதர



உறுப்புகளுக்குச் செல்லுமே தவிர, வயிற்றில் இரத்தமானது இல்லாமல் பலவீனமடைந்து செரிமானத்தின் இயக்கமானது பாதிக்கப்பட்டு, உணவு செரிமானமடையாமல் இருக்கும்.

## நடப்பது



பொதுவாக மக்கள் உணவை உண்டப் பின் சிறிது தூரம் நடந்தால், 99 வயது வரை வாழலாம் என்று நினைக்கின்றனர். உண்மையில் அது தவறான கருத்து. அவ்வாறு நடக்கும் போது ஏற்படும் செரிமானமானது, உணவில் உள்ள ஊட்டச்சத் துக்களை உறிஞ்சாமல் முற்றிலும் வெளியேற்றி விடும்.

## தூங்குவது



சாப்பிட்டதும் தூங்கினால், உணவானது சரியாக செரிமானமடையாமல் இருக்கும். மேலும் இந்த செயலால், வாயுத் தொல்லை மற்றும் குடலில் ஏதேனும் தொற்றுநோய் வந்து, பின் வயிற்றில் பிரச்சனை ஏற்படும்.



# தமிழ் யேர்மன் விளையாட்டு கலாச்சார கல்வி அமைப்பு-சோஸ்ற்



யேர்மனியில் சோஸ்ற் நகரத்தில் கடந்த 24.11.2012 சனிக்கிழமை தமிழ் யேர்மன் விளையாட்டு கலாச்சார கல்வி அமைப்பு நடத்திய கலைவிழா யேர்மன் மக்களும் நமது மக்களும் தத்தம் கலைகளை அரங்கேற்றினர். இவற்றில் சிறப்பாக யேர்மன் நாட்டவர் பரதத்தை சிறப்புற ஆடியது குறிப்பிடத்தக்கது. மண்ணின் வாசனையுடன் கூடிய, நடனங்களை சிறுவர்சிறுமிகள் அற்புதமாக ஆடி மகிழ்வித்தனர். மேலும் விழா இறுதிவரை விறுவிறுப்பாகவும் மகிழ்வாக வும் இருந்தமையை அரங்கம் பறைசாற்றியது. யேர்மனி யில் தமிழர்கள் என்ற தலைப்பில் சிறப்பானதொரு ஆவணக் காட்சியும் இடம் பெற்றது. பார்வையாளர்களாக பல யேர்மனியர்கள் கலந்து சிறப்பித்தமை எமது கலைகளை பெருமைப்படுத்தியது.




## செல்வன்.தவராஜசிங்கம் சந்தோஷ் Kids 2 Keys

### 2 ஆம் இடம் பெற்று சாதனை!

சந்தோஷ் கடந்த 2 ஆண்டுகளாக தொடர்ந்து சிறுவர்களுக்கான கிட்ஸ் 2 கீஸ் (Kids 2Keys) போட்டியில் சாதனை படைத்து வருகின்றார் 2011 ஆண்டு எசன் நகரில் நடந்த தேர்வு போட்டியில் தெரிவாகி பின் Karlsruhe நகரில் அரைச்சுற்று இறுதிப் போட்டியில் தெரிவாகி அதன்பின்னர் இறுதிப் போட்டி Herdeck இல் நடைபெற்றபோது பல இடங்களிலும் இருந்து தெரிவான 3 சிறுவர்கள் கலந்து கொண்டனர். செல்வன் சந்தோஷ் 2ம் இடத்தை பெற்று சாதனை படைத்தார். இது போன்று 2012 ஆண்டும் கலந்துகொண்டு இறுதிச் சுற்றில் கலந்து கொண்ட 5 சிறுவர்களில் 2ம் இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார். நூற்றுக்கணக்கான மாணவர்கள் போட்டியில் கலந்துகொண்டு தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். வெற்றிமணி செல்வன் சந்தோஷ் அவர்களின் கலையார்வத்திற்கு வாழ்த்துக்கூறி மகிழ்கின்றது.



## கலாஜோதி பட்டமளிப்பு விழா லண்டன்

Oriental Examination Board London இதன் இயக்குனர் திருமதி அம்பிகா தாமோதரம் அவர்கள் தலைமையில் Brent Town Hall, Forty Lane Wembley, London என்னும் நகரத்தில் 17.11.2012 அன்று நடாத்தப்பட்ட 2012ம் ஆண்டிற்கான பட்டமளிப்பு விழாவில், ஜேர்மனி எசன் (Essen) நகரத்தைச் சேரந்த செல்விகள் திவ்யா குகதாசன், தேவ விஜித்தா ஜெகதீஸ்வரன், தேவஜெசித்தா ஜெகதீஸ்வரன், (இரட்டையர்கள்) வாய்ப்பாட்டுக்கான சங்கீத கலாஜோதி பட்டம் பெற்றுக் கௌரவிக்கப்பட்டார்கள். இவர்கள் ஜேர்மனி முல்கைம் (Mülheim) நகரத்தைச் சேர்ந்த சங்கீத ஆசிரியை சங்கீத வித்தியா பூசணம் திருமதி. மீரா நித்தியானந்தன் அவர்களின் மாணவிகள் ஆவார்கள்.




அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்




# சதுரங்கத்தில் வெற்றிச் சரித்திரம் படைக்கும் நம்மவர் சிவாஜி!

## சதுரங்கம், இலங்கையில் படித்தவர், பணம் படைத்தவர் மத்தியிலேயே விளையாடப்பட்டது!

சென்ற நவம்பர் மாதம் 16ம் (16.11.12) திகதி தொடக்கம் 18ம் திகதி வரை சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற யூரா சர்வதேச சதுரங்க சுற்றுப் போட்டியில் குரும்பசிட்டியைச் சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியம் சிவாஜி, பங்குபற்றி சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுள்ளார். 5 சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் 4 புள்ளிகளைப் பெற்று 12வது இடத்தை இவர் அடைந்துள்ளார். பிரான்ஸ் நாட்டின் கிரான்ட் மாஸ்டர் அன்ட்ரய் சொக்கலோவிடம் மாத்திரமே இவர் தோல்வியைத் தழுவியுள்ளார். மொத்தம் 98 போட்டியாளர்கள் இப் போட்டியில் கலந்து கொண்டனர். சிவாஜி அவர்கள் கடந்த 22 வருடங்களாக சுவிற்சர்லாந்தில் சதுரங்கத்தை விளையாடி வருவதுடன், 2007ம் ஆண்டில் சுவிற்சர்லாந்தில், சுவிஸ் தமிழர் சதுரங்க ஒன்றியம் என்ற அமைப்பை ஆரம்பித்தவரும் ஆவார்.

சுவிஸ் தமிழர் சதுரங்க ஒன்றியத்தை ஆரம்பித்து வழிநடத்திவரும் சிங்கம் மற்றும் சிவாஜி அவர்களிடம் சில கேள்விகள்:

கேள்வி:சதுரங்கம் என்றால் என்ன?

பதில் : அது ஒரு கடல். விளையாட்டு, கலை, பொழுதுபோக்கு, தொழில் இப்படி பல விதமாகத்தனக்கு ஏற்றவாறு பயன்படுத்தலாம்.

கேள்வி:சதுரங்கம் எப்போது எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது.

பதில்: இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டது. எமது அரசர்களின் 4 படைகளையும் இணைத்து
உருவானது. (அதாவது யானை, குதிரை, தேர், காலாட்படை, அத்துடன் அரசன் அரசி)

கேள்வி:
சதுரங்கம் ஏனைய விளையாட்டுகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது.

பதில்: முக்கியமானது மூளைவளம். எந்தக் காலநிலையிலும், எந்த இடத்திலும் இருவரால்
விளையாடப்படுவது. தங்களுடன் இன்னும் ஒருவர் இருந்தால் போதுமானது. கணணியுகத்தில்
அதுவும் தேவையில்லை.

கேள்வி:
Cats என்ற பெயர்வரக்காரணம் என்ன?

பதில்: Chess Association of Tamils in Switzerland. அதன் சுருக்கம்தான் CATS

கேள்வி: Cats ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்ன.

பதில்: 22 வருடங்களாக இத்துறையிலுள்ள நாங்கள், நாம் பெற்ற இந்த அனுபவங்கள் எம் இனத்தவருக்கும் சென்றடைய வேண்டும், எம்முடனே அழிந்து போகக்கூடாது என்ற எண்ணத்தில் வந்ததுதான்.

கேள்வி: Cats தனது இலக்கைநோக்கி பயனிக்கின்றதா?

பதில்: சுவிசில் ஆரம்பிக்கப்பட்டாலும், டென்மார்க், பிரான்ஸ், கனடா என விரிந்து செல்கிறது. இது ஆலமரம் போல் வியாபிக்கும் என திடமாக நம்புகின்றோம்.

கேள்வி: இளையசமுதாயத்திற்கு வலியுறுத்தும் செய்தி என்ன?

பதில்: உங்களிடம் திறமை தேவைக்கு அதிகமாக இருக்கிறது. ஆர்வமுள்ளோர் முன்வாருங்கள். வழியை நாம் காட்டுகிறோம்

கேள்வி: விஸ்வநாதன் ஆனந்தன் பற்றி ..

பதில்: உலகில் முதல் தரத்தில் இருப்பவர், உலகச்சம்பியனாக இருக்கிறார். அவர் தழிழர் என்பதால் நாம் பெருமை கொள்கிறோம். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்.

கேள்வி: மாணவர்களுக்கு சதுரங்கம் எந்த வகையில் நன்மைபயக்கிறது.






பதில்: சிந்தனை, ஆற்றல், உள்ளே இருக்கும் திறமைகள் போன்றவற்றை இலகுவாக வெளியே கொண்டு வருகிறது. சொல்லிக் கொண்டே போகலாம்.

கேள்வி: சதுரங்கம் விளையாட எந்த வயதில் தொடங்கலாம். ?

பதில்:
வயது ஒரு தடையில்லை. 5 வயதில் தொடங்கியவர்தான் தற்போதய உலக சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த்.

கேள்வி: சதுரங்கம் விளையாடத் தெரியாது கற்றுக் கொடுப்பீர்களா?

பதில் ஆம் அதற்காகத்தான் நாம் பல இடங்களில் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி வருகின்றோம். அழையுங்கள்.

கேள்வி: எம்மிடம் திறமை இருந்தும் வளராததிற்க காரணம்.என்ன ?

பதில்: தனக்குத் தெரிந்தவற்றை மற்றவர்களுக்கு காட்டிக் கொடுக்காத தன்மை. இலங்கையில் படித்தவர், பணம் படைத்தவர் மத்தியிலேயே விளையாடப்பட்டு வந்தது.



விஸ்வநாதன் ஆனந்த்.


**தரன் வீடியோ & போட்டோ**

Tel:0208 88 265 73
0177 24 77 449




**இரத்தினம் ஜோதிட நிலையம்**

- சோஸ்ற்-

பரம்பரை பரம்பரையாகக் காப்பாற்றி வந்த சோதிடக்கலையின் நுட்பமான கணிப்பின்மூலம் உங்கள் குழந்தையின் ஜனன ஜாதகம் எழுத ருது, ஜாதகம் எழுத, திருமணப் பொருத்தம் பார்க்க இருக்கும் ஜாதகத்தின் பலன் அறிய, நன்மை தீமைகளை அறிந்துகொள்ள, பொருத்தமான காலமறிந்து முன்னேற்றமான வேலைகளை ஆரம்பிக்க....... தொடர்பு கொள்ளுங்கள்:



சோதிட வல்லுனர்
சந்திரசேகரம் கனகரெத்தினம் (Dip.A.G)
எங்கள் புதிய இலக்கம்:
Tel: 02921-3690003

S.Kanagaratnam
Hafer Winkel-3
59494 Soest-Germany





# சேலையில் கடவுள் படம்! சால்வையில் இருந்தால் தப்பு இல்லை!

## குஷ்பும் தொடரும் குறும்பும்!



நடிகை குஷ்பு கடவுள் படம் போட்ட சேலை உடுத்தி சினிமா விழாவில் பங்கேற்றது சர்ச்சையை கிளப்பி உள்ளது. இந்துக் கடவுள் களான ராமர், கிருஷ்ணர், அனுமன் போன் றோரின் படங்கள் அவர் அணிந்திருந்த சேலையின் தலைப்பில் இடம் பெற்றிருந்தன.

ஐதராபாத்தில் நடந்த படவிழா ஒன்றுக்கு இந்த சேலையை உடுத்தி சென்றார். விழாவில் கலந்து கொண்டவர்கள் அச்சேலையில் அவரை ஆச்சரியமாக பார்த்தனர். கடவுள் படங்களையும் உற்று நோக்கினர். கடவுள் படத்துடன் கூடிய சேலையை நடிகை குஷ்பு அணிந்ததற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இந்துக் கடவுள்களை அவ மதித்து விட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குஷ்புவுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடப் போவதாக இந்து மக்கள் கட்சி அறிவித்துள்ளது. இந்த பிரச்சினை குறித்து குஷ்புவிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:-

இந்த பிரச்சினையை நான் கண்டு கொள்ளவே இல்லை. வேலை இல்லாதவர்கள் இதை பெரிதுப் படுத்துகிறார்கள். நான் அவர்களைப் போல் இல்லை. ஏனென்றால் எனக்கு இதை விட வேறு நிறைய நல்ல விஷயங்கள் இருக்கிறது. சிலர் என் மூலமாக விளம்பரம் தேட முயற்சிக்கின்றனர். அதற்கு நான் இடம் கொடுக்க விரும்பவில்லை.

உருத்திராட்ச மாலையில் பிளாஸ்டிக் தாலியை கோர்த்து அணிந்திருந்தார் குஷ்பு. பேஷன் என்ற பெயரில் அவர் உருத்திராட்ச மாலையுடன், பிளாஸ்டிக் தாலியை கோர்த்து அணிந்திருந்தது நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிலரை முகம் சுழிக்க வைத்தது. இதற்கு முன்பு சினிமா விழா மேடையில் அமைக்கப்பட்டிருந்த அம்மன் சிலை முன்பு நடிகை குஷ்பு செருப்பு அணிந்தபடி கால்மேல் கால்போட்டு அமர்ந்திருந்த விவகாரம் பெரும் சர்ச்சையை கிளப்பியது. இந்த விவகாரத்தை இந்து அமைப்புகள் கடுமையாக கண்டித்தன. பிரச்னை விஸ்வரூபம் எடுத்ததால் மன்னிப்பு



கேட்டு பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்தார் குஷ்பு.

தமிழ் பெண்கள் கற்பு குறித்து பேட்டியளித்து வில்லங்கத்தில் சிக்கிய குஷ்பு சுப்ரீம்கோர்ட் வரை சென்றதும் நினைவிருக்கலாம்.


குஷ்புவையும் சர்ச்சையையும் பிரிக்கவே முடியாது போன்று ஒன்றெனக்கலந்துவிட்டாரோ?

இன்று ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக் களில் ஆண்கள் கடவுள் படம் பொறித்த சால்வையை (மஞ்சள்) இடையில் கட்டி இருப்பது எந்த வகையில் சிறந்தது. அதுவும் ஏற்கக்கூடிய ஒன்று அல்லவே!

ஆன்மாவில் ஆண்டவனை இருத்தி வையுங்கள். அழிந்துபோகும் உடலில் பச்சை குத்தத்தேவை இல்லை.




அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்




# முதலாவது எதிர்மறையாக பேசுபவர்களை விட்டு விலகுங்கள்.

# வாழ்க்கையை வெல்ல 6 வழிகள்!




தடம் பார்த்து நடப்பவன் மனிதன், தடம் பதித்து நடப்பவன் மாமனிதன் என்று சொல்வார்கள். எல்லோருக்கும் வெற்றி பெற வேண்டும் என்ற ஆசையும், மற்றவர்கள் நம்மை விரும்ப வேண்டும் என்ற எண்ணமும் இருக்கத்தான் செய்யும். வெற்றிக்கு முயற்சியும், தன்னம்பிக்கையும் போதும். வெற்றி பெற்றால் மற்றவர் உங்களை திரும்பி பார்க்கலாம், ஆனால் எல்லோரும் உங்களை விரும்பியும், நெருங்கியும் வர வேண்டுமென்றால் 6 அடிப்படை விஷயங்கள் அவசியம். அவை இங்கே...

## நம்பிக்கை:

நம்மிடம் இருக்கும் சிறந்த பழக்க வழக்கங்களே பிறரை நம்மை நோக்கி ஈர்க்கும். முதலில் நமக்கு நம் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். நான் அழகானவ(ன்)ள் என்ற எண்ணம் உங்கள் மனதில் எப்போதும் இருக்கட்டும். அழகு என்பது சருமத்தில் மட்டுமில்லை. சருமத்தை பராமரித்து அழகு படுத்திவிடலாம். கவர்ச்சியை விட நம்பிக்கை மேலானது. நம்பிக்கையின் பலனையும், ஈர்ப்பையும் உங்கள் வெற்றி தான் மற்றவர்களுக்கு உணர்த்தும்.

## நேர்த்தியான உடை:

ஹநான் கலராக இல்லை. எலும்பும் தோலுமாக இருக்கிறேன். எனக்கு எந்த டிரெஸ் போட்டாலும் நல்லா இருக்காதுஹ என்று எண்ணாதீர்கள். நேர்த்தியாக உடை அணியுங்கள். உடை அணிவது ஆளைக் கவர்வதற்கல்ல என்றாலும், பார்ப்பவர்களை மதிக்கத் தூண்டுவதும் நாம் அணியும் உடை தான். அது உங்களுக்கு வசதியானதாகவும் இருக்கட்டும். நல்ல மரியாதை, நல்ல நட்பு எல்லாவற்றையுமே நல்ல ஆடைகள் உருவாக்கித் தரும். நேர்த்தியான ஆடை உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.

## கனிவான பழக்கம்:

வீட்டுக்குள்ளேயே கிணற்றுத் தவளையாக முடங்கிக் கிடந்தால் இந்த உலகத்தின் அதிசயங்கள் உங்களுக்கு தென்படாமலே போகும். பழகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டால் தான் வெற்றியின் முகம் உங்களுக்கு காட்சி தரும். எனவே ஓய்வு நேரத்தை நண்பர்களுடன் இணைந்து சமூக சேவை செய்யும் விதமாக வெளியே கழித்தால் பலரையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். அப்போது உங்களுக்கு புதிதாக பலர் அறிமுகமாகலாம். நீங்களும் முதலில் உங்களை அறிமுகம் செய்து பழக்கம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பழக பழகத்தான் நம் பலமும், பலவீனமும் தெரியும். பிறகு நம் நடையை மாற்றி வெற்றி நடை போடலாம்.

## நட்பை தேர்வு செய்யுங்கள்:

வெற்றிக்குத் துணை நம்பிக்கை மட்டுமல்ல, நட்பும் தான். யாருடன் சினேகிதம் கொள்கிறோமோ அவர்களின் பழக்கம் நமக்கும் ஒட்டிக் கொள்ளும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் நட்பு கொள்வதில் அதிக கவனம் அவசியம். அதேபோல அருகில் இருப்பவர்கள், உடன் பணிபுரிபவர்கள் ஆகியோருடன் நட்புறவுடன் இணக்கமாக பழகுவதும் வாழ்க்கையில் வெற்றிக்கு உதவும். உங்களின் அழைப்பை மதிப்பவருடனும், மரியாதையுடன் பழகுபவருடனும், உங்கள் நலனில் அக்கறை கொள்பவருடனும் நட்பு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

## விமர்சனத்தை எதிர்கொள்ளுங்கள்:

நீங்கள் நிறைவான தோற்றத்தில் இருக்கும்போது பலரும் உங்களைப் பற்றி பேசிக் கொள்வார்கள். அதுபோல குறையான தோற்றத்தில் இருந்தாலும் பலரும் விமர்சிப்பார்கள். புகழ் பேச்சில் மயங்காமலும், குறை காணும் விமர்சனங்களில் கலங்காமலும் இருங்கள்.

## விலக்க வேண்டியவை:

வெற்றிக்காக விலக்க வேண்டிய விஷயங்கள் ஏராளம் உண்டு. முதலாவது எதிர்மறையாக பேசுபவர்களை விட்டு விலகுங்கள். அடுத்ததாக நேரத்தையும், செல்வத்தையும் செய்யும் பழக்கத்தை விட்டுவிடுங்கள். நண்பர்களுடன் அதிகமாக அரட்டையடிப்பது, தூங்கிக் கழிப்பது, இணையத்தளங்களில் நீண்டதூரம் உலாவருவது. போன்றவற்றை விலக்குவதன் மூலம் நேரத்தையும், செல்வத்தையும் மிச்சப்படுத்தலாம். இந்த ஆறும் இருந்தால் வெற்றி உங்களைச் சேரும், மற்றவர்களும் உங்களிடம் விரும்பி நட்பு பாராட்டுவார்கள்.




ஸ்ரீ முத்துமாரியம்மன் ஜோதிடம்

உலகப்புகழ்பெற்ற ஜோதிடர் இந்திய பாரம்பத்திலிருந்து

பண்டிதர் நாராயண சுவாமி

Tel:0152 149 361 21
0151 634 847 89



இந்தியவிலிருந்து வருகை தந்துள்ள பண்டிதர் நாராயண சுவாமி உங்களின் துள்ளியமான கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம், கைரேகை போன்ற விபரங்கள் மற்றும், தாயத்துக்கள் சத்கர ஸ்தாபனங்கள் வழங்கப்படும். சலகல விதமான பில்லி, சுனியங்களில் இருந்து விடுதலை பெற்றுத் தரப்படும். மோகினிப்பேய், இப்படி ஏராளமான வேதனைகளுக்கு தீர்வு தரப்படும். அன்பர்களே! உங்கள் எல்லாவிதமான பிரச்சனைகள் தீர, ஒரு முறை எங்களை நாடுங்கள். தொர்புகொள்ளுங்கள்:

**உங்களுக்கு இது போன்ற ஏதாவது பிரச்சனைகள் உள்ளதா?**
உடல்நலம்,திருமணயோகம்,
வாஸ்த்து வாஸ்திரம், பெயர்வசிகம்,
காதல்வசிகம், தொழில்வசிகம்,
கணவன் மனைவி,
திருமணம்,தொழில்முடக்கம் வியாபாரம்
உத்தியோகம்,குழந்தை பாக்கியம்,கண்திருஸ்டி,நீதிமன்ற
வழக்குள்,தோசங்களுக்கு பரிகாரம்.

Paulinen Str.48
44137 Dotmund
(Near from Gopara Gnanam)





om-namaste@hotmail.de

Om Namaste

Tel:0231 530 644 74

டோட்மூண்ட் நகரில் .....
நீங்கள் மட்டுமல்ல உங்கள் விருந்தினர்களூடனும்
ஆற அமர இருந்து அறுசுவை உணவை
உருசித்து மகிழ இதோ! ஓர் இடம்!
ஓம் நமஸ்த்தே!

Inhaber: **S.Sivakumaran**
Tel: 0176 49 75 7406
**Om Namaste**
**Rheinische Str.55**
**44137 Dortmund**

**Öffnungszeiten**
Di-Fr 11.00-15.30
Di-Fr 17.00-23.00
Sa,So Und Feiertage
11.00-23.00
Montag Ruhetag

OmNamaste

**Mittags Buffet**
**All you can eat!**
**only 6,00 €**
**(11.00-15.00)**

பிறந்த நாள் விருந்து
உபசார நிகழ்வுகள்
எமது உணவகத்தில்
சிறப்பாகச் செய்யலாம்!


அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்



ஓவியம்: கண்ணா- 2012

அண்மையில் உலகை அதிரவைத்த மற்றொரு சம்பவம்-
அமெரிக்காவின் கனெக்டிகியூட், நியூடவுன் பள்ளிச் சிறுவர் சிறுமியர் 20பேரையும் அதிபர் ஆசிரியர் உட்பட 7பேரையும் என 27பேரை வெறித்தனமாகச் சுட்டுக்கொன்றான் ஆதம் என்ற 20வயது இளைஞன். இவர்களுள் இவனைப் பெற்ற தாயும் அடக்கம். பின்னர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு அவனும் இறந்துபோனான்.

பல ஆண்டுகளுக்கு முன்னரும் இதுபோன்ற சம்பவங்கள் அமெரிக்காவில் நடந்தன என்றாலும் இது தொடர்கதையாகிவிட்டிருப்பது எல்லோரையுமே அதிர்ச்சிக் குள்ளாக்கியிருக்கிறது. துப்பாக்கிகளின் பாவனையில் கட்டுப்பாடுகள் குறைந்து போய்விட்டதுதான் இதற்குக் காரணம் என்று சொல்லப்படும் அதேவேளை சீனாவில் கத்தியால் பள்ளிக் குழந்தைகளைக் குத்திப் படுகாயங்களுக் குள்ளாக்கிய மற்றொரு வனைப் பற்றிய செய்தியும் வெளிவந்திருந்தது.

மத்திய சீனாவின் கென்னான் மாகாணத்தில் உள்ள செங்பிங் கிராமத்தின் ஆரம்பப் பள்ளி ஒன்றினுள் நுழைந்த ஒருவன் வெறிகொண்டவனாக அங்கிருந்த பள்ளிச் சிறுவர் சிறுமியர் 21பேரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தினான். அவனைத் தடுக்க முயன்ற பெரியவர் ஒருவரும் கத்திக் குத்துக்குள்ளானார். இதுபோன்ற கத்திக்குத்துச் சம்பவங்கள் சீனாவில் அதிகரித்து வருகின்றனவாம்.

ஆயுதங்கள் எதுவாக இருந்தாலும் அதைக் கையில் எடுப்பவனைப் பொறுத்தே காரியங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

இதுபோன்ற கொடும்செயலைச் செய்பவர்கள் எவராயினும் இறுதியாக மனநோயாளிகள் என்ற பட்டியலுக்குள் அடக்கப்பட்டு விடுகிறார்கள். கொடுமைகள் நிகழ்வதற்கு முன் அதைத் தடுப்பதற்கான வழிமுறை எவருக்கும் தெரிவதில்லை.

பாவம் பழிக்கு அஞ்சி வாழவேண்டும் என்பதைப் பாலர் பருவத்திலேயே கற்றுத்தர எல்லாச் சமூகங்களுமே மறந்துவிட்டன.
கொடுமைகள் நடந்தால் அதை எப்படித் தடுக்கலாம் என்று சொல்லித் தருவதற்கு முயல்பவர்கள்கூட, நாமும் மற்றவர்களுக்குத் தீங்குபுரியாதிருக்க வேண்டும் என்பதைக் கற்றுத் தர மறந்துவிடுகிறார்கள்.

எல்லாம் நடந்து முடிந்தபிறகு இதெல்லாம் அவரவர் செய்த பாவத்தின் பலன் என்று முடிவாகிவிடுகிறது.



அறிந்தோ அறியாமலோ அவரவர் செய்த பாவத்தின் பலனே இந்த மானிடப் பிறப்பு என்பதா கத்தான் பெரும்பாலானோர் புரிந்துகொண்டிருக் கிறோம்.
„ஏன்ன பாவம் செய்தேனோ இப்படி ஒரு பிள்ளை எனக்கு வந்து பிறந்திருக்கிறானே!“ என்று பெற்றவளும், „என்ன பாவம் செய்தேனோ இவள் வயிற்றில் நான் வந்து பிறந்தேனே!“ என்று பிள்ளையும் கசந்துகொள்கிறபோது தத்தம் பாவ வினையே இது என்று பாவத்தின்மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்ள முனைகிறார்கள்.
உண்மையில் பாவம் என்பது என்ன?
பாவம் என்பது தீமைகளின் மறு பெயர்.
ஆசை முதற்கொண்டு அடுத்தவர் வாழ்வை சீரழிப்பது வரை எத்தனையோ பாவங்கள். இவற்றில் மிகப்பெரிய பாவங்களைப் பஞ்சமா பாதகங்கள் என்று பகுத்து வைத்திருக்கிறார்கள் நம் முன்னோர்.

கொலை, களவு, பொய், மது, காமம் என ஐந்தும் மாபெரும் பாவங்கள்.
இவையே பஞ்சமா பாதகங்கள் எனப் படுகின்றன.
இவற்றில் ஒன்றேனும் இல்லாத ஒருமனிதனை யாவது எங்கேனும் காணமுடிகிறதா நம்மால்?
எல்லாப் பாவங்களுக்கும்

**தன்னைத்தான் உணராதவனும், தன் உயிரின் பெருமை தெரியாதவனும் பிற உயிர்களைப் பேணப் போவதில்லை.**

தண்டனை உண்டு எனினும் சில பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.
மன்னிப்புக்கு அப்பாற்பட்ட கொடிய பாவம் கொலை செய்வது.
ஏனைய பாவங்களுக்கு சம்பந்தப்பட்டோர்மூலம் பரிகாரம் செய்துவிடலாம். ஆனால் கொலையுண்ட ஒருவனுக்கு கொலையாளி என்ன பரிகாரத்தைச் செய்துவிட முடியும்?
கொலையாளிக்கு மரணதண்டனையையே தீர்ப்பாக்கி வைத்திருக்கும் உலகம் அந்தத் தண்டனையின் மூலம் மற்றுமொரு கொலையாளி உருவாகாமல் தடுக்க முயல்கிறது.
ஆனாலும் கொலைகாரர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. (அடிமட்டத்திலிருந்து ஆளும்வர்க்கம்வரை எத்தனையோ கொலைகாரர்கள் மறைந்தே இருக்கிறார்கள்.)
தன்னைத்தான் உணராதவனும், தன் உயிரின் பெருமை தெரியாதவனும் பிற உயிர்களைப் பேணப் போவதில்லை. பிறவுயிர்க்குத் தீங்கு புரிபவர்கள் எல்லாம் மனநிலை பிறழ்வுற்றே அதைச் செய்கிறார்கள் என்பதும் இதன் காரணமாகத்தான்.
நமது பிறப்புக்கெல்லாம் மூலமானது நமது பாவங்களே எனில் அந்தப் பாவவினைகளை அறுத்துக்கொள்ளும் வழிவகைகளே நமக்கு வேண்டியது.
துன்புறும் பொழுதுகளிலெல்லாம் நான் பாவி நான் பாவி என்று அரற்றுவதை விடவும் இந்தத் துன்பங்களுக்கெல்லாம் மூலமான பாவங்கள் எதுவென்பதை நாமே கண்டறிந்து அவற்றைக் களைந்தெறிவதே நமது முதல் வேலையாக வேண்டும்.

பாவத்தின் சம்பளம் மரணம் என்பது எப்போதோ தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.
அதேவேளை மரணமில்லாப் பெருவாழ்வு பெறும் வழிவகைகளும் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.
அதனைக் கண்டறிந்து கற்பதும் கற்பிப்பதும் பாவங்களிலிருந்து நம்மை விலக்கிக் காக்க உதவும்.


Kaneen electronics
புதியதோர் தொழில் நுட்பம்!!!!! புதியதோர் வாய்ப்பு!!.
Full HD,SDமுறையில் அனைத்து நிகழ்வுகளையும் Video-Photo செய்யவும்,சிறந்த முறையில் படத்தொகுப்பு செய்யப்பட்டு, Blue Ray DVD பதிவுக்கும்அனைத்து நிகழ்வுகளை விழா நடக்கும் இடத்தில் இருந்து செய்மதிமூலம் உலகெங்கும் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும் இவை அனைத்தும் மாதாந்த தவணை முறையில் வங்கியூடாக பெற்றுக் கொள்வ தற்கும்
Schevenhoferweg24 42111 Wuppertal
Tel: 02053 423 740 Fax: 2053 423 741 Mobil: 0172 2931266
www.kaneenelectronics.de info@ kaneenelectronics.de


T.T.S.Brothers GmbH&Co.KG
உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184
Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

# கெடுத்தவனே திருத்திவிட்டாண்டி!

## சிகரெட்டை சாலையில் போட்டுக் கொளுத்திய ரஜினி ரசிகர்கள்!!



புகைப் பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிடுங்கள் என்று சூப்பர் ஸ்டார் ரஜினி சொன்னதிலிருந்து, புகைப் பிடிப்பதற்கு எதிரான போராட்டங்களில் ரஜினி ரசிகர்கள் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.


முதல் கட்டமாக சைதை ரசிகர்கள் சிகரெட்டை சாலையில் கொட்டி எரித்து புகைப் பழக்கத்துக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். ரஜினியின் உடன் பிறந்த ஸ்டைலாக முன்பு திகழ்ந்தது புகைப் பிடிப்பது. இன்று உடல்நிலை பாதிக்கப்பட்ட பிறகு, அந்த நிலைக்கு மூல காரணமே சிகரெட் பழக்கம்தான் என்று ரஜினி உணர்ந்து, மது மற்றும் சிகரெட் பழங்கங்களை கைவிட்டுவிட்டார்.

சமீபத்தில் நடந்த சென்னை மாவட்ட ரசிகர்கள் விழாவில், "என் உடல்நிலை இவ்வளவு மோசமானதற்குக் காரணம் மது மற்றும் சிகரெட் பழக்கங்கள்தான். கெட்ட சகவாசத்தால் வந்து சேர்ந்த பழக்கங்கள் இவை. என் நுரையீரல் மற்றும் சிறுநீரகத்தை பாதித்தது புகைப் பழக்கம். எனவே என் ரசிகர்கள், இன்றே புகைப் பழக்கத்தை கைவிட வேண்டும். மது அருந்தாமலிருக்க வேண்டும்," என்று வேண்டுகோள் விடுத்தார் ரஜினி.

தலைவரின் இந்த வேண்டுகோள் ரசிகர்கள் மத்தியில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியுள்ளது. மாநிலம் முழுவதும், ஆங்காங்கே சிகரரெட் பழக்கத்துக்கு குட்பை சொல்லி, சிகரெட்டுகளை ஒன்றாக சாலையில் கொட்டி எரித்து வருகின்றனர் ரசிகர்கள். இதில் சில பொதுமக்களும் கலந்து கொண்டு, புகைப்பழக்கத்தை விடுவதா சபதம் எடுத்துள்ளனராம்.

இது மட்டுமல்ல, இனி சிகரெட் மற்றும் போதைப் பழக்கத்துக்கு எதிரான பிரச்சாரத்திலும் தீவிரமாக இறங்கப் போவதாக ரசிகர் மன்றங்கள் அறிவித்துள்ளன. அவருடைய ரசிகர்களில் பாதிப்பேர் ரஜினி தூக்ப்போட்டு பற்றவைக்கும் சிகரட் ஸ்ரைலுக்கு அடிமையாகி தாமும் அதனை பற்றவைத்தவர்கள்தான். அதனால் அவரால் கெட்வர்கள் அவராலேயே நல்வர்களாக்கப்படுதல் நல்லதொரு சகுனமே! கெடுத்தவனே திருத்திவிட்டாண்டி! என்று ஒரு படத்திற் பெயர்வைத்தாலும் இனி ஆச்சர்யம் இல்லை!

# கொழும்பில் சிறுபான்மையினராகி வரும் சிங்களர்கள்!



கொழும்பில் சிறுபான்மையினராகி வரும் சிங்களர்கள்

கொழும்பு: இலங்கைத் தலைநகர் கொழும்பில் சிங்களர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளதாம். அதேசமயம், தமிழர்கள் மற்றும் முஸ்லீம்களின் எண்ணிக்கை கிடுகிடுவென உயர்ந்து வருகிறதாம்.

இலங்கையில் நீண்ட காலத்திற்குப் பின்னர் சில மாதங்களுக்கு முன்பு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் தலைநகர் கொழும்பில் யார் அதிகம் உள்ளனர் என்ற தகவல் சிங்களர்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. காரணம், அவர்கள் கொழும்பில் மைனாரிட்டியாக உள்ளதாக கூறப்பட்டிருப்பதே.

அதாவது கொழும்பில் உள்ள சிங்களர்களின் எண்ணிக்கை வெறும் 24 சதவீதம்தான். மற்றவர்கள் அனைவரும் தமிழர்கள், முஸ்லீம்கள், பிற சமுதாயத்தினர் ஆவர்.

முஸ்லீம்கள்தான் 2வது பெரிய இனக்குழுவாக கொழும்பில் உள்ளனர். அவர்களது எண்ணிக்கை 40 சதவீதமாகும். 3வது பெரிய குழுவாக தமிழர்கள் உள்ளனர். இவர்களது எண்ணிக்கை 33 சதவீதமாகும்.

கடந்த 1971ம் ஆண்டு கணக்குப்படி கொழும்பில் சிங்களர்களின் எண்ணிக்கை 50 சதவீதமாக இருந்தது. 2001 கணக்குப்படி இது 41 சதவீதமாக இருந்தது. தற்போது அடியோடு குறைந்து போய் விட்டது.கொழும்பில் தற்போது 79,468 சிங்களர்களும், 1,26,345 முஸ்லீம்களும், 1,06,325 தமிழர்களும் உள்ளனர்.

இதே கணக்கெடுப்பினை கிழக்கிலும் வடக்கிலும் எடுத்தால் எமது நிலை புரியும். ஏன் கீரிமலையிலும் அவர்கள்தான்.



இன்று கீரிமலையில்...




எதனையும் நம்பிக்கையாகவும்
விரைவாகவும் பெற்றிட நாடுங்கள்!

ARNO ALLFINANZ

Finanzen mit Vertrauen

- Ratenkredite
- Kredite ohne Schufa
- Autofinanzierungen
- Kredite für Selbstständige
- Immobilien -Finanzierungen



தவணை முறை கடன் வசதி - வாகனக் காப்புறுதி
சொந்தத் தொழில் செய்வதற்கான கடன் வசதி
வீட்டுக்கான கடன் வசதி, மற்றும் இலங்கை, இந்தியா,
மலேசியா, ஆகிய நாடுகளில் இருந்து தொழிலாளர்களை
வரவழைத்தலுக்கான ஒழுங்குகள் (விசா) செய்து தரப்படும்.
வாகனங்கள் வாங்குவதற்கு முற்பணம் கட்டாமல்
வாங்க வசதி செய்து தரப்படும்.

Castroper Str.296
44627 Herne

E-Mail: arnoallfinanz@googlemail.de

Telefon : 02323 9886955
Mobil: 0176 84 57 53 73 oder 0163 31 35 835

யேர்மனியில் A1 (குடியுரிமை) B1 (காலவரையறையற்ற) விசாக்கள்
பெறுவதற்கான ஆலோசனைக்கும் உதவிக்கும் நாடுங்கள்.


அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்





# அம்மாடி மெல்லத்தட்டு! கன்னம் பளபளக்கும்!
# முகமும் அழகுபெறும்!!! ஆஹா புதுமையான அழகுநிலையம்!

அம்மாடி மெல்லத்தட்டு கன்னம் பளபளக்கும் என்று ஒரு பாடல் 1969 களில் ஒலித்தது. என் தம்பி படத்தில் சிவாஜி சரோஜாதேவி பாடியது.
அது என்ன? அம்மாடி மெல்லத்தட்டு கனம் பளபளக்கும் என்று அப்ப பாடிய பாட்டுக்கு இப்பதான் அதன் பொருள் விளங்குகின்றது.
கன்னத்தை தட்டுவதன் மூலமும் அழகு பெறலாம் என்று. அதுதான் என்னமோ சில கணவன் மனைவிமார் அடிக்கடி தட்டிக்கொள் கிறார்கள்.
சரி இங்கு முறையாக காசுகொடுத்து அடி வாங்கும் அழகியல் நிலையத்தைப் பார்ப்போம் .
பழங்களைக் கொண்டு முகத்திற்கு பேஸ்பேக் போடலாம், காய்கறிகளைக் கொண்டும் போட லாம், ஏன் ஒயினை வைத்து கூட முகத்திற்கு அழகு சிகிச்சை செய்கின்றனர். ஆனால் அறைவதன் மூலம் முகத்தை அழகாக மாற்ற முடியும் என்கின்றனர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த அழகியல் நிபுணர்கள்.

இந்த கன்னத்தில் அறையும் அழகு சிகிச்சை மையத்தை நடத்தி வருபவர் அகா டாடா. தாய்லாந்தை சேர்ந்த இவர், அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் அழகு நிலையம் நடத்தி வருகிறார். இவருடைய அழகு நிலையத்தின் தனித்துவமே கன்னத்தில் அறைவதுதான். இதற்கு கட்டணமாக 140 யூரோ வசூலிக்கிறார்.
மெல்லியதாய் கசியும் இசையை ஒலிக்கவிட்டு அதே ரிதமில் சிகிச்சைக்கு வரும் பெண்களின் கன்னங்களில் தட்டுகிறார் அழகு நிலையத்தை நடத்துபவர். இந்த அழகு நிலையம் முதலில் பாங்காக் நகரில்தான் தொடங்கப்பட்டது. தினசரி பன்னிரண்டுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் வந்து இவரிடம் கன்னத்தில் அறைவாங்கிக் கொண்டு (முகத்தை அழகு படுத்திக்கொண்டு) செல்வார்களாம்.இது எந்த பக்கவிளைவையும் ஏற்படுத்தாது. ரசாயனகலவை எதையும் முகத்திற்கு பூசுவ தில்லை. ஜஸ்ட் சில செல்லத்தட்டுக்கள்தான் என்கிறார் அழகு நிலையத்தை நடத்தும் அகா டாடா.ஆறு மாதத்திற்கு ஒருமுறை இந்த சிகிச்சையை எடுத்துக்கொண்டால் முகத்தில் சுருக்கம் நீங்கி இளமை ஊஞ்சலாடும் என்று உத்தரவாதமும் தருகிறார். கன்னத்தில் தட்டும்போது சத்தம்தான் வருமாம், வலிக்காதாம். சுகம் அது சுகம்.அது துன்பாமான இன்பமானது.



## எங்கள் இதய அஞ்சலி

**அமரர்**
**ஸ்ரீமதி**
**சிவசோதீஸ்வரி அம்மா.**

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் தமிழகத்தை வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்த எங்கள்அன்புத்தாயார் **ஸ்ரீமதி சிவசோதீஸ்வரி அம்மா.** காந்த சர்மா கடந்த 30.11.2012 இல் இறைபதம் அடைந்தார்.
அவர்களின் இறுதிக்கிரிகைளில் கலந்து கொண்டவர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும் பல நாடுகளில் இருந்தும் தொலைபேசிமூலமும் ஆனுதாபச் செய்திகளை அனுப்பினவர்களுக்கும் உற்ற நேரத்தில் உதவியவர்களுக்கும் எமது **உள்ளம் கனிந்த நன்றிகள்:**
அன்புடன் **சிவஸ்ரீ.க.சபாநாதக்குருக்கள்** எஸன்-யோர்மனி-
தொலைபேசி: **0201 65 24 50**

உ
குகமயம்

## பீலபெல்ட் அருள்மிகு
## கல்யாண திருமுருகன் கோவில்
## மஹா கும்பாபிஷேக (குடமுழுக்கு) பெருஞ்சாந்தி விழா விஞ்ஞாபனம்
**27.01.2013** ஞாயிற்றுக்கிழமை



அன்பார்ந்த முருகனடியார்களே,
ஐரோப்பாக் கண்டத்தின் பல வளங்களும் நிறைந்து கல்விச்செல்வம், செல்வச் செழிப்பு பக்திப்பெருக்கு பூரணமாக விளங்கும் ஜேர்மனியின் வடமேற்கின் அழகிய பீலபெல்ட் நகரில் பதிகொண்டு எழுந்தருளி, பக்தர்களின் குறைபோக்கும் அழகிய வேலோன் அருள்மிகு கல்யாண திருமுருகன், ஆனந்த விநாயகர், சாமுண்டீஸ்வரி (மாரியம்மன்), சிவலிங்கப் பெருமான், நவக்கிரக தேவர்கள், மற்றும் பரிவார தெய்வங்களுக்கும் திருமுருகனின் அருள்கொண்டும் குருவின் அருளாலும் எதிர்வரும் தைப்பூசத் தின சுபயோக சுபமுகூர்த்த வேளையில் மகாகும்பாபிஷேகம் என்கின்ற திருக்குடமுழுக்கு என்னும் பெருஞ்சாந்தி விழா வைபவம் நடைபெற அருள்பாலித்துள்ளது.
மகாகும்பாபிஷேகக் கிரிகை மூலம் நாம் கோவிலில் இறைவனை பிரதிஸ்டை செய்கின்றோம். பிரதிஸ்டை என்றால் சிறப்பாக நிற்றல் என்று பொருள். இறைவன் கோவிலில் உறையும் பொருட்டுச் செய்யப்படும். இத் திருப்பணியில் நாம் அனைவரும் பங்கு கொண்டு எம்மால் முடிந்த உதவிகளைப் புரிந்து, திருமுருகனின் அருளைப்பெற்று உய்வோம்.
மகாகும்பாபிஷேகத்தை தொடர்ந்து நாற்பத்தெட்டு நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. மண்டலாபிஷேகத்திலும், ஆலய வளர்ச்சியிலும் அனைவரும் பங்குகொண்டு இத்திருப்பணியைப் பூர்த்தி செய்வோம் 26.01.2013 சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும்.

**Begaweg 11, 33649 Bielefeld/Ummeln**
**Bankverbindung:-**
**TKBV e.V, Bielefelder Volksbank e.G, Kontonummer: 230 43 24 900 BLZ: 480 600 36**

**தொலைபேசி இலக்கம்**
**0176 - 41 41 56 42**
**0521-58 49 70 20**



Nimal வீடியோ அன் போட்டோ
Professional Video Movie
Full HD 1080
கலை விழாக்கள்...
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள்
எதுவானாலும் மனதோடு நிற்க
நமது ஒளிப்பதிவு கைகொடுக்கும்...
சிறந்த முறையில் உங்கள் மங்கல விழாக்களை
வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க எம்மை
நாடுங்கள்
தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55 Tel:01776794261

Lucky Fly
www.gozdon-travels.de
விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க
உடன் பதிவு செய்யுங்கள்....
தரமான விமானச் சேவைகளை
உங்களுக்கு பதிவுசெய்வோம்.

(Lotto Toto)
Allee Str.38-40 A
44793 Bochum
Tel: 0234- 23 99 032
0179- 1 48 48 92
S.Siva
Kaufmann



# ஆவணஞானி இரா.கனகரத்தினம் அவர்களின் சேவையும் தமிழ்போல் நிலைக்கும்!

இரா.கனகரத்தினம் தமிழ் அவர் மூச்சு! உலகத் தமிழ்ழர் இயக்கத்தை ஆரம்பித்து (1974) பின்னர் பண்பாட்டு இயக்கமாகப் பெயர் மாற்றி அதற்கு யாழ் நகரில் தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு வருகைதந்த, கடல் கடந்த தமிழ்ப் பிரதிநிதிகளை விரட்டி, விரட்டிப்,பிடித்து பேராசிரியர் சாலை இளந் திரையனை தலைவராக இருக்கும்படி வற்புறுத்தி, வெற்றியும் கண்ட கனகுவின் சரித்திரம் தமிழ் வெறிபிடித்தது. அவர்களைப் பற்றி திரு.கே.ஜி.மகாதேவா அவர்கள் அன்று 25.05.1975 சுதந்திரன் வார இதழில் எழுதியது.

# 500 வருடங்கள் ஆனாலும் அழியாது இருக்கும் நுண்படச் சுருள்களில் தமிழர் வரலாறு!

ஆவண ஞானி குரும்பசிட்டி திரு.இரா.கனகரத்தினம் அவர்களால் 1889 முதல் ஆவணி 2011 வரை இலங்கைத்தமிழர் வரலாறு மைக்ரோ பிலிம்களாக திரட்டப்பட்டுள்ளன. ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட இச்சேகரிப்புக்கள் இக்காலத்தில் நிகழ்ந்த அனைத்து சம்பவங்களையும் உள்ளடக்கியதாக, காய்தல் உவத்தலின்றி பல பக்கக்கருத்துக்களையும் அரச செய்திகள் உட்பட பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன.

மைக்ரோ பிலம் பிரதிகள் ஏறத்தாள 500 வருடங்கள் வரை வைத்து பேணமுடியும். ஆயினும் புதிய பிரதிகளாக மாற்றவும் ஒன்றுக்கு மேற்பட்டபிரதிகள் எடுக்கவும் வசதியுண்டு.

தமிழகத்திற்கு வந்தபின்னரும் (2008) இலங்கைத் தமிழர் வரலாற்றை ஆவணப்படுத்தும் பணி தொடர்கின்றது. இதுவரை 300 மைக்ரோ பிலிம்களை பதிவு செய்துள்ளோம். அத்துடன் ஒரு குடும்பத்தின் உன்னத நன்கொடையாக எதிர்காலச் சந்ததிக்கு இவற்றை விட்டுச்செல்வதில் நானும் என் மனைவியும் பிள்ளைகளும் மகிழ்சியடைகின்றோம். என்கின்றார். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் யாவும் யாவருக்கும் கிட்டா விட்டாலும். அதில் உள்ளடங்கியிருக்கும் முக்கிய விடயங்களை அவ்வப் போது தரவுகளாக (புத்தகங்களாக) தந்துகொண்டு இருக்கும் திரு.கனகரத்தினம் அவர்களின் இப்பணியும் அவசியமாகிறது.
அந்த வகையில் அண்மையில் இரு நூல்கள் வெளியாகி உள்ளன. ஒன்று ஒரு குடையின் கீழ் உலகத்தமிழினம் இரண்டாவது இலங்கைத் தமிழர் வரலாறு (1890-2011) மைக்ரோ பிலிம்களில் என்பவையாகும்.

வாரலாறு இல்லையேல் தமிழர் வாழ்வு இல்லை, என்ற வாசகத்துடன் வாழும் இவர்கள் இன்னும் பல நூல்களை மக்களுக்கு வழங்க ஆண்டவன் ஆத்மபலத்தை வழங்கவேண்டும்,என்று சிவத்தமிழும் வெற்றிமணி இறைவனை வேண்டி வாழத்துகின்றது. இந்நூல்கள் தமிழர் வரலாறு பற்றிய அரிய பல புதிய தரவுகளை தந்துள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

## உலகில் தமிழர் நினைவாக அமைந்த நினைவுத் தூபி!

தமிழர்களின் தன்னலமற்ற தியாகத்திற்காக எழுப்பப்பட்ட நினைவுத்தூபி. தமிழர்கள் குடியேறிய குவாட்லோப் என்ற கரீபியன் தீவுக் கடற்கரையில் நிறுவப்பட்ட நினைவுத்தூபி. குவோட்லோப் தீவின் வளத்திற்கும் பொருளாதார பங்களிப்புக்கும், அவர்கள் வழங்கிய தன்னல மற்ற தியாகத்திற்குமாக குவாட்லோப் அரசால் தமிழர் வந்திறங்கிய Pointe A Pitre என்ற இடத்தில் நிர்மானிக்கப்பட்ட நினைவுத்தூபி ஓம் என்ற எழுத்தம், தங்கத்திலான சூரியன், 4 திசைகளிலும் சங்குகள், சிவனின் திரிசூலம். கரும்புச் செடியின் இலை. விநாயகர் சிலை,எனத் தமிழர்களின் பண்பாடு பாரம்பரியங்களைச் சுமந்து நிற்கும் இச்சிலை தமிழ்களின் உழைப்புக்கும் தியாக சிந்தனைக்கும் அர்ப்பணிப்பாக எழுதுநிற்கின்றது.



இத்தூபி தமிழர்கள் அங்கு வந்திறங்கி 150 வருட நினைவை (1854-2004) முன்னிட்டு 2004 ஆம் ஆண்டு கொண்டாட்டத்தின் போது அமைக்கப்பட்டது.

## இவர்கள் எல்லோரும் தமிழர் மரபு வழிவந்தவர்களே!



1.S.W.R.D பண்டாரநாயக்கா 2. பிரதமர் ஸ்ரீமாவே பண்டாரநாக்கா 3.முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா 4. முன்னாள் ஜனாதிபதி J.R.ஜெயவாதனா.

ஆய்வாளர் ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் ஒரு தலைசிறந்த தமிழ் இனப்பற்றாளர், அரசியல்வாதி. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு பின்புறம் தன் மனைவியின் பெயரில் ஒரு வரலாற்று ஆய்வு மையத்தை நிறுவியவர்.

தொடர்ச்சி 18ம் பக்கம்


யேர்மனியில் Manheim நகரில்
INDO AFRO TRAVELS
Mit uns um die Welt
மிகவும் மலிவாகவும் உங்கள் தேவையை
ஒரே இடத்தில் பூர்திசெய்து கொள்ளவும் நாடுங்கள்..
Tel:0621 86 24 32 12
Fax:0621 86 24 32 14
இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!
S.J. Enterprises
Indo-Afro Travels
S.1-11
68161 Mannheim
தொடர்புகளுக்கு: ஸ்ரீதர்
Handy:0173 68 28 990
e.mail info@indo-afro.de

திருக்கணித ஜோதிடம்
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450



# சிறுநீரகத்தைக் காக்கும் சுரைக்காய்!

**ஜெயா மலர்**

மனிதனின் உடலுக்கு தேவையான அனைத்து ஊட்டச் சத்துக்களையும் கொடுப்பதில் காய்கறிகளின் பங்கு அளப்பரியது. காய்கள் அனைத்துமே எளிதில் செரிக்கும் தன்மை கொண்டவை.
நம் கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் தோட்டப்பயிராக காய்கறிகளைப் பயிர்செய்து பயன்படுத்தி வந்தனர். அவற்றில் ஒன்றான சுரைக்காய் பற்றி தெரிந்துகொள்வோம்.

சுரைக்காயை பல இடங்களில் வீடுகளின் கூரைமேல் படர விட்டிருப்பார்கள். அது வெள்ளை நிறப் பூக்களையும், பெரிய குடுவை போன்ற காயையும் கொண்டிருக்கும். சுரையின் இலை, கொடி, காய், விதை அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டவை.

## உடல் சூடு நீங்க

இலங்கை இந்தியா போன்ற வெப்பமண்டல நாடுகளில் உடல் சூடு இயல்பாகவே அதிகமாகக் காணப்படும். இதனால் உடலானது பலவகையான இன்னல்களைச் சந்திக்க நேரிடும். இதனால்தான் நம் முன்னோர்கள் உடல் சூட்டைத் தணிக்க சுரைக்காயை உணவில் அதிகம் சேர்த்து வந்துள்ளனர். சுரைக்காயை ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்து வந்தால் உடல் சூடு குறையும், வெப்ப நோய்கள் ஏதும் அணுகாது.

## சிறுநீர் பெருக

மனித உடலில் உள்ள தேவையற்ற நீர்கள் வியர்வை, சிறுநீர் வழியாக வெளியேறும். சிறுநீரகமானது இரத்தத்தில் உள்ள இரசாயனத் தாதுக்களைப் பிரித்து வெளியேற்றுகிறது. சில சமயங்களில் இவை வெளியேறாமல் மீண்டும் இரத்தத்தால் உறிஞ்சப்பட்டு உடல் பலவகையான இன்னல்களைச் சந்திக்க நேரிடுகிறது. இந்த நிலையைப் போக்கி சிறுநீர் நன்கு வெளியேற சுரைக்காய் சிறந்த மருந்து.

## பித்தத்தைக் குறைக்க

உணவு மாறுபாட்டாலும், மன அழுத்தத்தாலும் உடலினை இயக்குகின்ற வாத, பித்த, கபத்தில் பித்தத்தின் நிலை அதிகரிக்கும்போது உடல் பலவீனமடைந்து பல நோய்களின் தாக்குதலுக்கு ஆளாக நேரிடும். இந்த பித்தத்தைக் குறைக்க சுரைக்காய் சிறந்தது. சுரைக்காயை மதிய உணவுடன் சேர்த்து அருந்தி வந்தால் பித்தம் சமநிலைப்படும்.

**சுரைக்காய் நரம்புகளுக்கு புத்துணர்வைக் கொடுக்கும்.**
**உடலை வலுப்படுத்தும்.**
**பெண்களுக்கு உண்டாகும் சோகையைப் போக்கும்.**
**இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்.**
**குடல் புண்ணை ஆற்றும்.**
**மலச்சிக்கலைப் போக்கும்**
**மூலநோய் உள்ளவர்களுக்கு சுரைக்காய் சிறந்த மருந்து.**

சுரைக்காயின் சதையை சிதைத்து உடலில் தேய்த்து சிறிது நேரம் கழித்து குளித்து வந்தால் உடல் எரிச்சல் குறையும்.சுரைக்காயைச் சுட்டு சாம்பலாக்கி தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் கண்நோய் நீங்கும்.

சுரையின் இலைகளை நீரிலிட்டு ஊறவைத்து அந்த நீரைப் பருகி வந்தால் வீக்கம், பெருவயிறு, நீர்க்கட்டு நீங்கும். காமாலை நோய்க்கும் கொடுக்கலாம்.

ஒரு துண்டு சுரைக்காய், விதை நீக்கிய ஒரு நெல்லிக்காய் இவற்றை நீர்விட்டு அரைத்து சாறு பிழிந்து வாரம் இருமுறை காலையில் வெறும் வயிற்றில் அருந்தி வந்தால் இரத்த அழுத்தம் கட்டுப்படும்.


Nirubagini Magendiran

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் - யேர்மன்
யேர்மன் - தமிழ்

Tamil- Deutsch
Deutsch- Tamil

Tel: 0176/ 24012135
Email:
nirumagendiran@hotmail.com

Vereidigte Dolmetscherin
und
ermächtigte Übersetzerin


17ம் பக்கத் தொடர்ச்சி...





## இவர்கள் எல்லோரும் தமிழர் மரபு வழிவந்தவர்களே!

நீண்ட காலம் தலைநகர் கொழும்பில் வாழ்ந்தவர். முதல் பெண் பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டரநாயக்க குடும்பத்தினரதும் ஜனாதிபதியாக இருந்த J.R.ஜெயவர்த்தனா குடும்பத்தினரதும் நெருங்கிய குடும்ப நண்பர்.
இவர் தனது நீண்டகால ஆய்வின் பின் ஸ்ரீமாவோ பண்டாரநாக்கா நீலப்பெருமாள் என்ற தமிழ்ர் வழிவந்த வாரீசு என்பதனையும். J.R.ஜெயவாதனா தம்பிமுதலியார் என்ற தமிழர் மரபுவழி வந்தவர் என்பதனையும் போதிய ஆதாரங்களுடன் நீரூபித்து **TRIBUNE** என்ற ஆங்கில ஏட்டில் நீண்ட பல கட்டுரைகளை எழுதி ஒரு அரசியல் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தார்.

தகுந்த சான்றுகளுடன் வெளிவந்த இக்கட்டுரைபற்றி ஸ்ரீமாவோ குடும்பத்தில் இருந்து எதுவித மறுப்போ கருத்து வெளிப்பாடோ வரவில்லை.**J. R**.ஜெயவாதனா மட்டும் அந்த ஆய்வு சுவாரஸ்யமாக உள்ளது என்பதோடு நிறுத்திக் கொண்டார்.

இந்த நிகழ்விற்குப்பின் திரு.ஜெம்ஸ் தேவதாசன் இரத்தினத்திற்கு நடந்த ஒரு பாராட்டுவிழாவில் **J.R.**ஜெயவாதனா கலந்துகொண்டு (இரத்தினத்தின் முதுமை காரணமாக) அவரைக் கையைப்பிடித்து மேடைக்கு அழைத்துச் சென்று பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். திரு.ஜெம்ஸ் தேவதாசன் இரத்தினத்தின் மரணத்தின் போது உலங்கு வானூர்திகள் மூலம் மலர்மாரி பொழியுவும் **J.R.**ஜெயவாதனா ஏற்பாடு செய்திருந்தார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

நன்றி: இலங்கைத் தமிழர் வரலாறு (1890-2011) இரா.கனகரத்தினம்.


அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை! இன்று அதே சுவையுடன் டோட்மூண்ட் நகரில் ஓர் நானா கடை அதுதான்

Sweet Chilli

www.sweetchilli-do.de

Original Srilankisches & Indisches Restaurant
50 Sitzplätze
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter

இலங்கை புரியாணி (ஒரிஜினால்) கொத்துரொட்டி, இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ் மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய உணவுவகைகள்,அனைத்தும் ஒரே கூரையின் கீழ் .தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை

Tel: 0231 315 46 84
Rheinische str.60
44137 Dortmund

Herzlich Willkommen!
Buffet & Party Service








(குரு அரவிந்தன்)

"சூரியா, அந்தப் பெண்ணைப் பார்த்தியா?"

தாய் சாரதா சொன்னதை காதில் வாங்கிக் கொள்ளாமல் அலட்சியமாய் தெருவில் பார்வையைச் செலுத்தினான் சூரியா.
அப்பாவிற்கு கோயில், குளங்களுக்குப் போவதில் கொஞ்சமும் நம்பிக்கையில்லை. அதனாலே என்ன தான் தலை போகிற காரியமாய் இருந்தாலும் வெள்ளிக் கிழமைகளில் தாயைக் கோயிலுக்கு அழைத்துச் செல்வதில் சூரியா தவறுவதில்லை. அதைத் தன்னுடைய கடமையாகவே கருதிச் செய்தான். இன்றும் அப்படித்தான் கோயிலுக்குப் போய்விட்டு ஸ்கூட்டரில் இருவரும் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

அம்மாவின் தொல்லை கொஞ்ச நாளாய் தாங்க முடியாமல் போய்விட்டது. தங்கை திருமணம் செய்து புகுந்த வீட்டிற்குப் போய்விட்டதால் இவன் தனித்துப்போய் அம்மாவிடம் வசமாய் மாட்டிக் கொண்டான். எப்படியாவது காலாகாலத்திற்கு மகனுக்கும் திருமணம் செய்து பார்க்கவேண்டும் என்ற தீராத ஆசையில் தினமும் மகனை நச்சரிக்கத் தொடங்கினாள் சாரதா.
எங்கேயாவது அழகான பெண்களைக் கண்டால் மனம் மாறியாவது சம்மதம் சொல்லுவானோ என்ற அற்ப ஆசை அவளுக்கு. அதனாலே எங்கேயாவது ஷாப்பிங் போனால், கோயிலுக்குப் போனால் "அந்தப் பெண்ணைப் பாரேண்டா தேவதை மாதிரி என்ன அழகு, இந்தப் பெண்ணைப் பாரேண்டா என்ன மாதிரி லட்சுமி கடாட்சமாய் இருக்கிறா" என்று தினமும் இதே தொல்லையாய்ப் போய்விட்டது. அதனாலே தான் தாயார் பின்னாலே இருந்து காதுக்குள் கிசுகிசுத்தபோது திரும்பிப் பார்க்காமல் அலட்சியம் செய்தான்.

"ஏன்டா, யார் யாருடைய பிரச்சனையை எல்லாம் வலியப்போய் உன்னுடைய தலையிலே போட்டுக் கொண்டு செய்வியே, இதை மட்டும் ஏன் கண்டு கொள்ள மாட்டேனெங்குறாய்? பாவமடா அந்தப் பெண்ணு, ஏதோ ஆபத்திலே மாட்டியிருக்கிறா போலத் தெரியுது! கொஞ்சம் உதவி பண்ணேண்டா?"
"யாரை அம்மா சொல்லுறாய்?" பச்சை விளக்கு எப்போ எரியும், அங்கிருந்து கிளம்பலாம் என்ற அவசரத்தில் அவனிருந்தான்.
"இந்தப் பக்கம் கொஞ்சம் திரும்பிப் பாரேன்"

வேண்டா வெறுப்பாய்த் திரும்பிப் பார்த்தவன் ஆச்சரியப்பட்டான்.
யார் அந்த தேவதை?
ஒருகணம் அவளை உற்றுப் பார்த்தவன் அதிர்ந்து போனான்.
இவளா?
ரம்யா! அந்த ஊரிலே உள்ள செல்வந்தர் ஒருவரின் மகள். இவளது அண்ணன் ரமேஷ் இவனோடு சட்டக் கல்லூரியில் ஒன்றாகப் படித்த நண்பன். பழகுவதற்கு இனியவன். ஆனால் இவளோ பணத்திமிர் பிடித்தவள். அதைவிட தான் பெரிய உலகஅழகி என்ற எண்ணம் வேறு. நண்பனைத்தேடி அவர்கள் வீட்டிற்குப் போனபோதெல்லாம் இவனை அவள் கண்டு கொள்ளாமல் அலட்சியம் செய்தது இவன் மனதில் அந்த நாட்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

வெறித்த பார்வையோடு சாரதியின் ஆசனத்தில் ஆடாமல் அசையாமல் அவள் உட்கார்ந்திருந்தாள். யாரோ பின்னால் இருந்து துப்பாக்கி முனையில் அவளைக் கடத்திக் கொண்டு போவது போல மிரண்டுபோய் இருந்தாள். அவளது முகத்தில் பயக்களை அப்படியே தெரிந்தது.

"இவளுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்" என்று அவனது பழிவாங்கும் மனசு ஒருகணம் நினைத்தது.
ஆனால் அவன் படித்த சட்ட அறிவு அவனைச் சிந்திக்க வைத்தது. அவள் மீது அவனுக்கு தனிப்பட்ட வெறுப்பு இருந்தாலும் ஆபத்திற்கு உதவவேண்டும் என்ற நல்லமனம் அவனை விரைவாகச் செயற்பட வைத்தது.

சட்டென்று தனது ஸ்கூட்டரை அவளது காருக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்திவிட்டு இறங்கி காரைச் சுற்றி வந்து நோட்டம் விட்டான். வேறு யாராவது துப்பாக்கியோடு இருக்கைக்குப் பின்னால் மறைந்து இருக்கிறார்களோ என்று கண்ணாடிக் குள்ளால் பார்வையைச் செலுத்தினான். அன்னியர் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.
இவளுக்கு என்ன நடந்திருக்கும்?

அதைப்பற்றி சிந்திக்க இப்போது நேரமில்லை! அவள் ஆடாமல் அசையாமல் பயத்தோடு சீட்டில் உட்கார்ந்திருப்பதில் இருந்து அவளுக்கு ஏதோ ஆபத்துக் காத்திருப்பது தெரிந்தது. அருகே சென்று பார்த்தபோது அவள் முகத்தில் பொட்டுப் பொட்டாய் வியர்வை துளிர்த்திருந்தது. இதயம் வேகமாகத் துடிக்க அவளது சின்னமார்பு மேலும் கீழும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. குனிந்து உள்ளே பார்வையைச் செலுத்தியவன் மீண்டும் அதிர்ந்தான்.

இடுப்பிலே அது என்ன கறுப்பாக ஒரு பட்டி..?

அவளது இடுப்பிலே இருக்கையோடு சேர்ந்தபடி பெல்ட் ஒன்று கட்டப்பட்டிருந்தது. அவளது இதயத் துடிப்பையும் மிஞ்சி டிக், டிக் சத்தம் இவன் காதில் விழுந்தது. ஒவ்வொரு டிக், டிக் சத்தமும் மரணதேவனிடம் அவளை இழுத்துக் செல்வது இவனுக்குப் புரிந்தது.


குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டு, அதாவது டைம் பாம்!

இது யாரோ விஷமிகளோ, தேசவிரோதிகளோ செய்த வேலையாய் இருகக்கலாம். இன்னும் சொற்ப நேரத்தில் அவன் கண்முன்னாலேயே இந்த அழகிய மலர் இதழ் இதழாய்ச் சிதறுண்டுபோமோ?

நினைக்கவே அவனது உடம்பு நடுங்கியது.

தொடர்ச்சி 21 ம் பக்கம்






# இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் வந்த தமிழ் இலக்கியங்களில் ஓசோன் !.



தற்கால அறிவியல்அறிஞர்களால்புவிக்கு மேலே இருக்கும்வான்வெளி ஆறு பகுதிகளாகப்பகுக்கப்பட்டுள்ளது. புவியில் இருந்து ஒன்றன்மேல் ஒன்றாகட்ரோபோஸ்பியர் (troposphere) ஸ்ட்ரோட்ஸ்பியர் (stratosphere) மீஸோஸ்பியர் (mesosphere) தெர்மாஸ்பியர் (thermosphere) எக்ஸோஸ்பியர் (exosphere) நத்திங்னஸ் (nothingness) எனஅவை அமைந்துள்ளன. இவற்றுள்புவிக்கு மேலே முதலில் அமைந்திருப்பது ட்ரோபோஸ்பியர். இது வான்வெளியின் மொத்த கன அளவில் பதினேழில் ஒரு பங்குதான். ஆனால், வான்வெளியில் உள்ளமொத்தக் காற்றின் அளவில் ஐந்தில்நான்கு பகுதி இங்கு தான்இருக்கிறது.

இன்றைக்கு ஏறத்தாழ 2,000ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த தமிழர்கள்வான் வெளியை ஐந்து கூறுகளாகப்பிரித்துக் கூறி இருப்பதை அறியும்போது வியப்பும்மகிழ்வும், பெருமிதமும் ஒருங்கே உண்டாகின்றன.

"இருமுந்நீர்க் குட்டமும் வியன் ஞாலத்து அகலமும்வளிவழங்கு திசையும்வறிதுநிலை இயஆகாயமும்." (புறநா - 20)

என்னும் வரிகளில் புவிக்கு மேல் உள்ள மூன்று பகுதிகள் கூறப்பட்டுள்ளன.

"செஞ்ஞாயிற்றுச்செலவும்அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்சூழ்ந்த மண்டிலமும்வளிதரு திசையும்வறிதுநிலை காயமும்." (புறநா -30)

என்னும் வரிகளால்புவிக்கு மேல்ஐந்து பகுதிகள்குறிப்பிடப்பட்டுள்ளன.

"மயங்கிருங் கருவியவிசும்பு முகனாக இயங்கிய இருசுடர்கண்ணெனப் பெயரியவளியிடை வழங்கா வழக்கறு நீத்தம்." (புறநா -365)

என்னும் வரிகளில் இரண்டு பகுதிகள்குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் "திசை"என்னும் பகுதியில்காற்று இருக்கும். "ஆகாயம்", "நீத்தம்" என்னும் பகுதிகளில் எதுவும்இருக்காது எனவும்கூறப்பட்டுள்ளது.

"நீத்தம்"என்பது இன்றைய அறிவியலார் கூறும்"வெறுமை" (நத்திங்னஸ்) என்னும் பகுதி. புவிக்கு மேல் இருக்கின்ற இரண்டாவது பகுதியான "ஸ்ட்ரோட்ஸ்பியர்" என்னும் பகுதியில் தான் "ஓசோன்"எனப்படும் காற்றுப்படலம் அமைந்துள்ளது.

இப்படலம் கதிரவனிடம்இருந்து வரும் கடும்வெப்பத்தை, தான்தாங்கிக் கொண்டு புவியில்உள்ள உயிர்கள் துன்பம் உறாமல்காத்துவருகிறது. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்கண்டு பிடிக்கப்பட்ட இந்த ஓசோன் படலத்தைப்பற்றி 2ஆம் நூற்றாண்டில்வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் குறிப்பிட்டிருப்பது வியப்பை அளிக்கிறது அல்லவா?

"நிலமிசை வாழ்வர் அலமரல்தீரதெறுகதிர்வெம்மை கனலி தாங்கிகாலுண வாகசுடரொடு கொட்கும்அவிர்சடை முனிவரும் மருள." (புறநா - 43)

என்னும் பாடல் வரிகளின்கருத்து, "புவியில்வாழும் மக்களின் துன்பம்தீர கதிரவனின் வெப்பம்மிக்க கனலைத்தாங்கிக்கொண்டு கதிரவனோடு சேர்ந்து சுழல்கின்றமுனிவர்கள்" என்பதாகும்.

மேலும், முருகக்கடவுளின் ஒரு கை,"விண்செலல் மரபின்ஐயர்க்கு ஏந்தியது" என்றுதிருமுருகாற்றுப்படை (107) யிலும்,


"சுடரொடு திரிதரும் முனிவரும், அமரரும் இடர்கெட அருளி நின்இணையடி தொழுதோம்" என சிலப்பதிகாரத்திலும்(வேட்டுவ வரி - 18) இக்கருத்து கூறப்பட்டுள்ளது

.

முனிவர்கள்என்று கூறப்பட்டதாலேயே, மற்ற மதத்தினரும் பகுத்தறிவு வாதிகளும்இது அறிவியல்கருத்தன்று கற்பகமரம்,காமதேனு போன்றகற்பனை களுள்ஒன்று தான்என்று சொல்லக் கூடும்.

முனிவர்கள் என்றாலும்சரி அல்லது பிறவற்றைச்சுட்டினாலும்சரி அது ஒரு பொருட்டன்று. கதிரவனின் வெப்பத்தைத்தாங்கிக் கொள்ளும்ஒரு சக்தியைப் பற்றித்தமிழர்கள் (சங்கப்புலவர்கள்) சிந்தித்திருக்க்றார்கள் என்னும்செய்தி நாம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே கூறிவிட்டோம் என்று நினைக்கும்போது, இந்த செந்தமிழ்நாட்டில் பிறந்ததை எண்ணி நாம்பெருமை கொள்ளவேண்டும் !.அப்படிப்பட்டநம் தமிழ்மொழியை உலகெங்கும்பரவ வழிவகை செய்ய ஒவ்வொரு தமிழனும் உறுதி ஏற்கவேண்டும்


ஸ்ரீ ஆஞ்சநேயா ஜோதிடம்
பண்டித் ஈஸ்வர் சுவாமி
உலகப்பிரசித்தி பெற்ற சாஸ்திரி இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளார்
இந்தியாவில் இருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள பண்டித் ஈஸ்வர் சுவாமி அவர்கள் அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய வீபரங்களைக் கூறுவார், துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் வீடயங்கள், கணவன் மனைவி ஒற்றமை, வீசா பிரச்சனை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில் வியாபாரம், லட்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோர்ட் வழக்குகள், வாகனப்பொருத்தம், மந்திர தந்திரம் அகற்றிக்கொடுக்கப்படும், இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளிலும் சாஸ்திரம் சொல்லப்படும்
140, Bombay Bazaar Ealing Road Wembley HA0 4PY (near popat stores)
Open 7 days a Week 9.00am to 8.00pm
Mob: 07931 057 499 & 07404 564 549



சரஸ்வதி கல்யாணமாலை
இதோ ஒரு திருமணசேவை! பெற்றோர்களே கவலையைவிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கு மணமகனையோ மணமகளையோ தேடிகஸ்டப் படாதீர்கள். கலாச்சார மேம்பாட்டனும் சாதகக் குறிப்புகளுடனம் நீங்கள் விரும்பியபடி மணமக்களை சிறப்பாகத் தேர்ந்தெடுக்க எம்மை நாடுங்கள். பல ஆண்டுகள் சேவையாற்றி நம்பிக்கை பெற்ற ஸ்தாபனம்
தொடர்புகளுக்கு: செல்வி:
0173 27 50 457- Tel: 02333 86 93 159
02333 86 93 165



Bielefeld நகரில்....
Sahanan Video
Video& Foto
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளையும்
மிகத் துல்லியமாகவும்
அழகாகவும் படம்பிடித்து தருகின்றோம்.
K.Ravi
Tel:0521 42 86 528
Möbil:0177-191 21 28
e-mail:sahananvideo@hotmail.de
Full HD& Blu-ray





தினசரி மாலை 6.00 மணிக்குப் பூஜை உண்டு
துர்க்கா பூஜா துரந்தரர் சிவசாமிக்குருக்கள் ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
Robert koch Str.5
58239 Schwerte
Tel: 02304/ 16721

19ம் பக்கத் தொடர்ச்சி

# யார் அந்த தேவதை?



நினைக்கவே அவனது உடம்பு நடுங்கியது.
அவள் மட்டுமா பாதிக்கப்படுவாள், இங்கே அக்கம் பக்கம் எல்லாமே பாதிக்கப்படுமே? அப்பாவி மக்களின் உயிர் உடமை எல்லாமே சட்டென்று அவன் கவனத்தில் வந்தன. ஏதாவது செய்து இந்த அழிவைத் தடுத்தேயாக வேண்டும்.
“நோ!“ என்று வாய்விட்டுக் கத்தியவன், அவசரமாகச் செயற்பட்டான்.
தனது செல்லிடபேசியில் குண்டு அகற்றும் அவசரபிரிவிற்கு விபரத்தை தெரிவித்தான். தனது ஸ்கூட்டரின் அவசர விளக்கைப் போட்டு ஏனைய பயணிகளை அந்தக் காருக்கு அருகே வராமல் எச்சரிக்கை செய்துவிட்டு தாயாரிடம் விரைந்து வந்தான்.
“அம்மா, ஒரு ஆட்டோ எடுத்துக் கொண்டு நீங்க வீட்டிற்குப் போங்க, இந்தாங்க பணம், நான் அப்புறம் வர்றேன்.”
தாயாரின் கைகளில் பணத்தைத் திணித்துவிட்டு பதிலுக்குக் கூடக் காத்திராமல் ரம்யாவிற்கு அருகே சென்று சாரதிபக்கக் கதவில் ஏதாவது வயர் பொருத்தப் பட்டிருக்கிறதா என்பதை அவதானித்தான். இல்லை என்று தெரிந்ததும் கதவின் கைப்பிடியில் கையை வைத்து மெதுவாக இழுத்தான். கதவு மெல்லத் திறந்து கொண்டது.
பக்கவாட்டில் அவளை இப்போ முழுமையாக அவனால் பார்க்க முடிந்தது.
”பயப்படாதே!” என்று மெதுவாக குனிந்து அவள் காதுக்குள் ஆறுதல் வார்த்தைகள் சொன்னான்.
மெல்லத் தலைசாய்த்து அவளது முழங்காலுக்கருகே உடம்பை வளைத்து அவளது இடுப்புப் பட்டியை ஆராய்ந்தபோது அவளது சூடானமூச்சுக் காற்று இவனது கன்னத்தில் பட்டுத் தெறித்தது. அலங்கோலமாய் மேலே ஏறியிருந்த அவளது ஸ்கேட்டை இழுத்து மற்றவர்களின் பார்வையில் இருந்து மறைத்து விட்டபோது அவளின் உடம்பு சிலிர்ததை இவனால் உணரமுடிந்தது.
“டிக்.. டிக்.. டிக்..!”
நேரம் வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. அந்த மணிக்கூட்டில் நேரத்தைப் பார்த்தான்.
மூன்றே மூன்று நிமிடங்கள் தான் மிஞ்சியிருந்தன. வாழ்வா, அல்லது சாவா?
மூன்று நிமிடங்கள் தான் பாக்கி என்று தெரிந்ததும் அவளது உடம்பு மெல்ல மெல்ல உதறலெடுத்தது. எப்படியாவது என்னைக் காப்பாற்றிவிடு, பிளீஸ் பிளீஸ்..! என்பது போல அவளது விழிகள் அவனிடம் கெஞ்சி மன்றாடின. உயிர்ப் பிச்சை கேட்பது போல அவளது மெல்லிய உதடுகள் வார்த்தைகள் வராமல் துடிப்பதை இவன் அவதானித்தான். அவளது கண்கள் மரணபயம் என்றால் என்னவென்று அப்படியே காட்டிக் கொடுத்தன.
இப்போ அவள் இருக்கும் அந்த நிலையைப் பார்த்தபோது அன்று அவனை அலட்சியம் செய்த பெண் இவள்தானா என்பதை அவனால் நம்பமுடியாதிருந்தது. பெண் என்றால் பேயே இரங்கும் போது இவன் மட்டும் எம்மாத்திரம்?
வீணாக்கும் ஒவ்வொரு மணித்துளியும் முக்கியமானது! அதன் பெறுமதி அளவிடமுடியாதது!
எப்படியாவது இந்த இக்கட்டில் இருந்து அவளைக் காப்பாற்றிவிட வேண்டும் என்று உடம்பெல்லாம் துருதுருத்தது. குண்டைச் செயலிழக்க வைக்கும் பிரிவினருக்காக இனியும் காத்திருக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டவன், விரைவாகக் காரியத்தில் இறங்கினான்.
எந்த வயரின் தொடர்பைத் துண்டிப்பது? கறுப்பா, சிவப்பா?
எப்போதோ ஒரு ஆங்கிலப் படத்தில் இப்படியான குண்டைச் செயலிழக்க வைப்பது எப்படி என்பதைப் பார்த்த ஞாபகம் திடீரென வந்தது. ஆனால் எந்தநிற வயரைத் துண்டித்தான் என்பது சட்டென்று ஞாபகத்திற்கு வர மறுத்தது.
கறுப்பா? சிவப்பா? மூளைக்கு வேலை கொடுத்துப் பார்த்தான்.
பதட்டத்தில் “ஏதோ ஒன்று!“ என்ற பதில் தான் வந்தது.
நிறத்தைச் சொல்லத் தயங்கியது.
இனியும் காத்திருப்பதில் அர்த்தமில்லை. வருவது வரட்டும் என்று கண்ணை மூடிக்கொண்டு கடவுளைப் பிரார்த்தித்தபடி கையில் அகப்பட்ட ஒரு வயரைப் பிடித்தான். என்ன நிறம் என்று கூடப் பார்க்கவில்லை.
துண்டிக்கலாமா? ஒரு கணம் தயங்கினான்.
“டிக்.. டிக்.. டிக்..!”
இன்னும் பத்து வினாடிகள்! இனியும் தாமதிக்க முடியாத நிலைமை. எப்படியோ வெடித்துச் சிதறப்போகிறது.
அதற்கிடையில் இரண்டில் ஒன்று பார்த்து விடுவோம்!
“தொலைந்துபோ!”“ என்று ஆவேசமாகக் கத்தியபடி அந்த வயரைப் பிடித்து இழுத்தான்.
ஒரு வினாடி எல்லா இயக்கமும் நின்றுபோக, மறுகணம் “படீர்“ என்ற சத்தம் கேட்டது, அவன் சுதாரிக்குமுன் அவன் மார்பில் அவள் பொத்தென்று விழுந்தாள். நினைவிழந்த அவளை மெதுவாகத் தாங்கி அணைத்து, பட்டியை அகற்றி அங்கே தயாராக வந்து நின்ற ஆம்புலன்ஸில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றான் சூரியா.
நினைவு தெளிந்து அவள் படுக்கையில் கண்விழித்துப் பார்த்தபோது, மங்கிய வெளிச்சத்தில் சூரியாவின் முகம்தான் முதலில் தெரிந்தது.
தனக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் மிரள மிரளப் பார்த்தாள். அருகே உட்கார்ந்து இருந்த சூரியாவின் கைகளைப் பற்றிக் கொண்டு, குண்டு வெடித்ததா இல்லையா என்ற சந்தேகத்தோடு,
“நாங்க எங்கே இருக்கிறோம்” என்றாள்.
அவளது அந்த ஸ்பரிசத்தில் உடம்பெல்லாம் கிளுகிளுப்பில் சிலிர்க்க தன்னை மறந்த சூரியா, அவளது கேள்வியின் அர்த்தம் புரியாமல் மெல்லிய புன்னகையோடு, “சொர்க்கத்தில்!” என்றான்.

# கேட்டது கிடைத்ததடி கண்ணம்மா! கை நிறைய..






சீனாவில் நடுரோட்டில் இருந்த வீடு இடிக்கப்பட்டது: கேட்டது கிடைத்தடி கண்ணமா கை நிறைய கேட்டது கிடைத்தடி கண்ணம்மா!
கடந்த மாதம் ஊடகங்களிலும், இணையதளங்களிலும் அதிகம் இடம் பெற்ற வீடு எதுவெனில் சீனாவின் ஜெஜியாங் மாகாணத்தில் உள்ள வென்லிங் நகரில் நடுரோட்டில் இருந்த வீடுதான் என்று கூறவேண்டும். இதற்குக் காரணம் ஒரே ஒரு வீடு மட்டும் தனியாக இருக்க அதனைச் சுற்றிலும் சாலைகள் இருந்ததே பரபரப்பிற்கு காரணமாக அமைந்தது. அரசு தரப்பில் உரிய இழப்பீடும் வழங்கப்பட்டது. ஆனால் அந்த பகுதியில் வசித்து வந்த வாத்துப்பண்ணை உரிமையாளரான லூ என்பவர் தன் வீட்டை காலி செய்ய மறுத்து விட்டார். 6 லட்சம் யுவான் செலவழித்து, தன் வீட்டை கட்டியுள்ள தாகவும், அரசு தரும் 2 லட்சத்து 20 ஆயிரம் யுவான் இழப்பீட்டை பெற்றுக் கொண்டு, நான் எங்கே போய் இடம் வாங்கி, வீடு கட்டி வாழ முடியும் என்று வாதாடிய அவர் இறுதிவரை அந்த வீட்டை காலி செய்யவில்லை. மூன்று வருடமாக சர்ச்சை நீடித்தது.இந்நிலையில் அந்த வீட்டை மட்டும் இடிக்காமல் விட்டுவிட்டு இருபுறமும் நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது. போக்குவரத்துக்கு இடையூறாக அச்சாலையின் நடுப்பகுதியில் இவரது வீடு மட்டும் தனியாக இருந்த காட்சி, அப்பகுதியில் முன்னர் குடியிருந்த வீட்டு உரிமையாளர்கள், தங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டை யும் உயர்த்தி வழங்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுக்கவே லூ-வின் வீட்டிற்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க சீன அரசு சம்மதித்தது. இதையடுத்து, மாகாண அதிகாரிகள் (08.12.12) இன்று அந்த வீட்டை இடித்து தரைமட்டமாக்கினார்கள். வெற்றி மணி மார்கழி இதழில் சீனமக்களின் தனிமனித சுதந்திரம் என்ற தலைப்பில் இடியாது இருந்த வீட்டின் செய்தி வெளி வந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.






யேர்மனியில் பிராங்பேட் நகரில்...
Jaffna Basar
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்த நகைகள்
பயணங்களை இனிமையாக்க குறைந்த விலையில்
விமான பயணச்சீட்டுக்கள் மற்றும் இல்லத்திற்கு வேண்டிய
மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும்
Jaffna Basar Jewellery
Kaiserstr.64 (Laden Nr.22)
60329 Frankfurt am Main
உரிமையாளர் நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53

யேர்மனியில் முல்கைம் நகரில்...
Jaffna Basar
இல்லத்திற்கு வேண்டிய மளிகைப் பொருட்கள்
கடல் உணவு வகைகள்
பசுமையான மரக்கறிகள்.
தெலைபேசி அட்டைகள்
சிம் காட்டுக்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Jaffna Basar
Kaiserstr.39
45468 Mülheim
Germany
Tel:02086 96 64 85
Tel:01787633084


அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

# ரஜினியின் ஐந்து அவதாரங்கள்!



### குருநாதர்....

“எம்.எஸ்.வி-யை சந்திக்கறதுக்கு முன்னால் சோத்துக்கு வழியில்லை.... சந்தித்த பின்னால் சோறு உண்ண நேரமில்லை“என்று எம்.எஸ்.விஸ்வ நாதனை பற்றிப் பேசும் போது கவிஞர் வாலி அடிக்கடி சொல்லுவார்.
அப்படித்தான் நானும் கே.பி சாரைபற்றி (கே.பாலச்சந்தர்) சொல்லுவேன். எனக்குள்ளே இருக்கின்ற நடிகனை முதன்முதலா கண்டிபிடிச்ச கடவுள். அப்புறம் தான் உலகத்துக்கே நான் தெரிந்தேன். என்னை தெரியவச்சார்! “காமிரா முன்னாடி நடி... பின்னாடி நடிக்காதே..“என்று சொன்னதை இன்று வரைக்கும் கடைபிடித்து வருகின்றேன்

### கண்டக்டர்....

கர்நாடகா டிரான்ஸ்போர்ட்ல கண்டக்டரா வேலை பார்த்தப்போ ராஜ்பகதூர் நண்பனா கிடைச்சான். இப்போகூட ஓய்வு கிடைக்கும் போது பெங்களூரு போனால் வீட்டில் கூட அதிகம் இருக்க மாட்டேன். நண்பர்களோட பொழுது போக்குவேன். இப்போ பணம், பேர், புகழ் எல்லாம் இருக்கு.. ஆனா அப்போ இருந்த சந்தோஷம், நிம்மதி இப்போ நிச்சயமாக இல்லை.

### மனைவி...

திருமணம் முடிஞ்ச பிறகுதான் “ஏண்டா இவ்வளவு தாமதமாக கல்யாணம் செய்தோம் என்று எண்ணும் அளவுக்கு லதா அன்பா இருந்தாங்க. என்னோட முன்கோபம், சினிமா தொழில்ல இருக்குற பிரச்சைனைகள் எல்லாவற்றையும் நல்லா உணர்ந்து உறுதுணையா இருக்குறாங்க. அம்மாவுக்கு என்னோட ஆரோக்கியம் முக்கியம் என்றா, லதாவுக்கு என்னோட எதிர்காலத்து மேல் மிகவும் அக்கறை.

### நட்சத்திரம்

“திரிசூலம்“ வெள்ளிவிழா நிகழ்ச்சிக்கு மதுரைக்கு போயிருந்தேன். அப்போ எல்லாரும் மீனாட்சி அம்மன் கோயிலுக்கு போய் அவர்கள் அவர்கள் பேரைச்சொல்லி சுவாமியிடம் அர்ச்சனை செய்தார்கள். குருக்கள் என்னுடைய நடத்திரத்தை கேட்டார் “தெரியாது சாமீ..“ என்று சொன்னேன். இப்போதான் உண்மை தெரியுது, மக்கள் கொடுத்து இருக்குற பட்டம்தான் (சூப்பர்ஸ்டார்) என்னோட உண்மையான நட்சத்திரம் என்று.



### ரசிகர்....

“அபூர்வ ராகங்கள் “ படத்தை சென்னை கிருஷ்ணவேணி திரையரங்கில் முதன்முதலா பார்த்தேன். நான் நடிச்ச காட்சியை திரையில பார்த்ததும் சீட்டில் உட்கார்ந்து இருந்த ஒரு சிறுமி என்னை திரும்பி பார்த்தார். படம் முடிந்து வெளியில வரும்போது என்னிடம் ஓடிவந்த சிறுமி சினிமா டிக்கட் பின்னால் கையெழுத்து கேட்டார்.. நான் போட்டேன். எனக்கு கிடைச்ச முதல் ரசிகை அந்த சிறுமிதான். அவர் எங்கே என்று தேடிக்கொண்டே இருக்கின்றேன். நான் போட்ட முதல் ஆட்டோகிராப் சினிமா டிக்கட் பின்னால்தான்.


Milin Impex

Asiatische Lebensmittel Groß und Einzelhandel

யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான தரமான
இலங்கை,இந்திய,மற்றும் ஆபிரிக்கா உணவுப் பொருட்களைச் சிரமம்மின்றி
ஒரே இடத்தில் மலிவாகவும்,
மொத்தமாகவும்,சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே ஒரு 22 வருட அனுபவமிக்க நிறுவனம்.
Tel:0231 45 96 17 / 28

யேர்மனியில் தலைமுறை,
தலைமுறையாக
தரமான ஆசிய, ஆபிரிக்க
உணவுப் பொருட்களின்
இறக்குமதியாளர்களும், மொத்த,
சில்லறை விநியோகஸ்தர்களும்.



சில்லறை வாடிக்கையாளர்களுக்கு
ஓர் இனிய செய்தி!

எமது நிறுவனத்தின் 22 வது ஆண்டு நிறைவான 01.01.2013 இல் இருந்து சில்லறை வாடிக்கையாளர்களும், மொத்தவிற்பனை விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்து கொள்ளலாம். (100 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டும்)
மலிவு விற்பனை விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். Web :www.milinimpex.de

01.01.13 முதல்
31.01.2013 வரை
எம்மிடம் கொள்வனவு செய்யும்
அனைவருக்கும்
10€ பெறுமதியான
Lyca Möbile
Sim card
ஒன்று இலவசம்

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen

Dortmund நகரில்
Westendorf Str.41
44287 Dortmund
Tel: 0231 45 96 17 /28
Fax: 0231 18 15 288

Wuppertal நகரில்
Aue-96
42103 Wuppertal
Tel: 0202 2999 58 69

Lüdenscheid நகரில்
Höch Str.8a
58511 Lüdenscheid
Tel:02351 9742131

Milin Impex

Mail:info@milinimpex.de





காத்திக்-ராதா

## கடல்


கௌதம்-துளசி


ஐஸ்வர்யா ராவ்

கார்த்தி மகன் கவுதம், ராதா மகள் துளசி நடிக்க, ஏ ஆர் ரஹ்மான் இசையில் மணிரத்னம் செதுக்கியுள்ள படம் கடல். அன்று பாரதிராஜா இயக்கிய அலைகள் ஓய்வதில்லை படம் மூலம் திரையுலகில் நுழைந்தனர் கார்த்திக்கும், ராதாவும். தற்போது அவர்களது பிள்ளைகள் ஜோடியாக அறிமுகமாவது திரையுலகில் ஓர் புதுமை.வழமைபோல் மணிரத்தினம் படம் என்றால் இலங்கையை மையமாக வைத்து ஏதாவது எடுப்பார் என்பார்கள். அந்த வதந்தி இங்கும் உண்டு. கடலைத் தொடர்ந்து அடுத்த படத்தில் மீண்டும் ஐஸ்வர்யா ராவ் கைகோர்க்கலாம் போல் தெரிகிறதே!


## சிறு வயதிலேயே நடிக்க வந்துவிட்டதால் ஸ்ரீதேவியால் படிக்க முடியவில்லை.




நடிகை ஸ்ரீதேவியின் மூத்த மகள் ஜான்வி எழுத்தாளராக விரும்புவதாக தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், எனக்கு தெரியவில்லை. நான் படித்துக் கொண்டிருக்கிறேன். என்னால் ஒரு முடிவை எடுக்க முடியவில்லை. ஒவ்வொரு வாரமும் எனது எதிர்காலம் பற்றிய முடிவை மாற்றிக் கொண்டே இருக்கிறேன். சில நேரம் உளவாளியாக, எழுத்தாளராக விரும்புகிறேன். அதனால் எனக்கு நிஜமாகவே தெரியவில்லை என்றார்.

ஸ்ரீதேவி கூறுகையில், எனது மகள்கள் என்ன முடிவு எடுத்தாலும் நான் அவர்களுக்கு ஆதரவாக இருப்பேன். எதைச் செய்தாலும் சிறப்பாக செய்ய வேண்டும் என்று நான் அவர்களிடம் கூறுவதுண்டு. முதலில் அவர்கள் படிப்பை முடிக்க வேண்டும் என்றார்.

சிறு வயதிலேயே நடிக்க வந்துவிட்டதால் ஸ்ரீதேவியால் படிக்க முடியவில்லை. அதனால் தான் தனது மகள்களை படிக்க வைப்பதில் தீவிரமாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## சிவாஜி-சினேகா-திரிஷா

இப்போது திரையுலகம் ஒரு புதுயுகத்தில் உள்ளது என்று சொல்லாம். அரைத்த மாவையே திருப்பி அரைப்பது போல் இப்பொழுது முன்வந்த படங்களுக்கு புத்துயிர் கொடுப்பதும். அதனை வெட்டிக் கொத்தி அலங்கரிப பதும். அதுமட்டுமன்றி அப்பட்தை மீண்டும் தற்போது உச்சத்தில் உள்ள நாயகர்களை வைத்து மீண்டும் எடுப்பதும் ஒரு நாகரீகமாய்ப்போச்சு!. இப்போதும் உச்சத்தில் இருப்பவரது படங்களை 3டியில் எடுத்து மீண்டும் ஒரு சுற்று வெளியிட்டு பணம் சேர்ப்பதும் வாடிக்கையாக உள்ளது.

சரி எந்த நடிகர் நடிகைகளை நேர்கண்டாலும். அட நான் சிவாஜி சாரோடு, எம்.ஜி.ஆரோடு ஒரு படம் செய் முடியவில்லையே என்ற வருத்தம் உண்டு என்பார்கள். அதே போல் நடிகர்களைக் கேட்டால் அட அமலாவுடன் நடிக்க முடியவில்லை. கே.ஆர்.விஜயா வுடன் நடிக்க முடியவில்லை என்கிறார்கள். எனவே இப்போ உள்ள தொழில் நுட்பத்தை பாவித்து நடிகர்திலகம் சிவாஜிகணேசன் நடித்த வசந்தமாளிகையை சினேகா வையும் திரிஷாவையும் வைத்து எடுத்தால் எப்படி இருக்கம் என்ற கற்பனையில் வந்து விழுந்த படங்கள் இவை. எப்படி இருக்கிறது. நயந்தாரவும் எம்.ஜிஆரும் இணையலாம். சூர்யாவும் காஞ்சனாவும் இணைந்து காதலிக்க நேரமில்லை படத்தினைத் தரலாம். விஜய்யும் அமலாவும் இணைந்து கொடிபறகிறது படத்தை தரலாம். கற்பனைக்கு ஏது எல்லை. ஏது வேண்டுமானாலும். செய்யலாம். இப்போ கற்பனை என்று நினைத்த பலவிடையங்கள் உண்மையாகிவரும் காலம் அல்லவா!




அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

19 வருட சேவையில் தங்கமாய்
ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

LITTLE INDIA
Textile & Jewellery

02131 273692



Little India வின் மற்றுமொரு சேவை

உலகெங்கும் இன்பமாய் சிறகடித்துப் பறக்க இதமான சேவை....

EurAsian - Tours

அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி
செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள்
செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு
ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

Rishi 0174 96 44 965

info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy



Eurasian Tours
Adolf - flecken -Str.11
41460 Neuss



ASIA BAZAR

உங்கள் உறவுகளுக்கு பணம்
அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச்
சேவை!

Ria Money Transfer
MoneyGram International Money Transfer

ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை,
இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...

தீபம்

உரிமையாளர்: பா.கனேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

தீபம்
தொலைக்காட்சி
அட்டைகள்
எம்மிடம் கிடைக்கும்

யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு

தரமும் சுவையும்
தரும்...



Tel:0231- 7252859

CEYLON IMBISS
இலங்கை உணவகம்

இலங்கை, இந்திய,
உணவுகள், தரம்
குன்றாத சுவையுடன்
கிடைக்கும்!

திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை
நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Annen Str.1
44137 Dortmund

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen



HP:0173 1937 325
T.Mohanadas

Jasmine Silk House

பட்டுச்சேலைகள் புதுப் புது டிசைன்களில் கண்கவரும்
வண்ணம் வந்து குவிந்துள்ளது. எம் பட்டுச்சேலைகளின்
வனப்பில் நீங்கள் பட்டது ராணியாகத் திகழ்வீர்கள்.
எங்கள் யஸ்மின் பட்டு மாளிகையில் எந்த நாளும் சேலைத்
திருவிழா!

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

Tel:02102 844744



StaR - Impex

StaR-Impex

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

StaR Impex Gutschein

எம்மிடம் 100 யூரோவிற்கு மேல்
கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்கள்
ஒவ்வொருவருக்கும் ஒரு தடவை
ஒரு முத்திரை பதிக்கப்படும்.
இவ்வாறு 10 முத்திரை நீங்கள்
பெற்றபின் எம்மிடம் இருந்து
50 யூரோவிற்கான Gutschein
ஒன்று வழங்கப்படும்.
(இச்சலுகை நேரடியாக உடன் பணம்
செலுத்துபவர்களுக்கு மட்டுமே)

கடல் உணவு வகைகள் மற்றும்
பசுமையான மரக்கறிகள்
வாரவாரம் உடனுக்குடன்
இறக்குமதி செய்கின்றோம்!

தரமான முத்திரை பதித்த
தயாரிப்புக்களான
Niru,Kings,NGR, Rabeena,
Suriya,Vaani,Leela,TRS
பொருட்கள் எம்மிடம்
நியாயவிலையில் கிடைக்கும்!

Kipper str.Tor.3
44147 Dortmund
Germany

Tel.: 0231/8602696

StaR Impex : Inh :K.Sivasubramaniam

Mobil: 0172/2183703- Fax: 0231/8602698
E-Mail: star-impex@live.de - Web.Star-impex.net